REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2022 ஜூன் 1 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 127 | Wednesday 01, June, 2022 | 12 பக்கங்கள் | 40/-




## அரச வருமானத்தை அதிகரிக்க ஐந்து வரிச்சட்டங்களில் திருத்தம்

### பிரதமரின் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்

**ஷம்ஸ் பாஹிம்**



2019 ஆம் ஆண்டிறுதியில் இலகு வரிக்கொள்கையை அறிமுகப்படுத்தி சேர் பெறுமதிவரி, தனிநபர் வருமான வரி, கூட்டு வருமான வரி போன்ற வரிகளில் வரிவீதத்தைக் குறைப்பதற்கும் சேர் பெறுமதி வரி மற்றும் தனிநபர் வருமான வரியை குறைப்பதற்கும் அரசாங்கத்தால் மேற்கொண்ட தீர்மானத்தால் அரச வருமானம் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்துள்ளது.

அவ்வாறே, மொத்த தேசிய உற்பத்தி வீதமாக வரவு செலவுப் பற்றாக்குறை மற்றும் அரச கடன் அதிகரிப்பதற்கும் குறித்த தீர்மானம் காரணமாக அமைந்துள்ளது. இந்நிலைமையின் கீழ் அரச 05

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள

## பொது மக்களுக்கு நிவாரணம் வழங்க 695 பில். ரூபா குறைநிரப்பு பிரேரணை

### பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க பிரதமர் ரணில் ஏற்பாடு

**ஷம்ஸ் பாஹிம்**



அத்தியாவசியமான பொதுச் சேவைகளை இடையூறு இன்றிப் பேணுவதற்குத் தேவையான நிதியை வழங்குவதற்கான குறைமதிப்பீட்டு மதிப்பீட்டை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. தேசிய வரவு செலவுத் திணைக்களத்தின் வரவு செலவுத் திட்ட ஆதரவு சேவைகள் 05



பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியாக ஷவேந்திர சில்வா ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் ஜனாதிபதியிடம் நியமனக் கடிதத்தைப்பெற்றுக்கொண்டபோது...



புதிய இராணுவத் தளபதியாக விக்கும் லியனகே நியமிக்கப்பட்டுள்ளார். அவர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமிருந்து நியமனக் கடிதத்தைப்பெற்றுக்கொள்ளும்போது...

பொதுமக்களுக்கு உதவ இராணுவம் படகுகள் தயார் நிலையில்

# கடும் மழையுடனான சீரற்ற காலநிலை தொடரும் நிலை

### பல பகுதிகளில் 100 மி.மீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி

### ஆறுகளை அண்டிய பகுதிகளிலுள்ள மக்களுக்கு எச்சரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் தற்போது நிலவும் மழையுடனான வானிலையும் காற்று நிலைமையும் இன்றும் அடுத்த சில நாட்களிலும் சற்று அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இந்தப் பிரதேசங்களில் சில இடங்களில் 100 மி.மீக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

கொழும்பின் பல பகுதிகளில் நேற்றுமுன்தினம் இரவு 05




- 10 மாவட்டங்களுக்கு தொடர்ந்தும் மண்சரிவு அபாயம்
- கொழும்பில் கடும் காற்றுடன் பெய்த மழையால் பாதிப்பு

## நாளை ஜூன் 02 முதல் மீண்டும் மின் துண்டிப்பு

### பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மீண்டும் நாடளாவிய ரீதியில் மின் துண்டிப்பை நடைமுறைப்படுத்த பொது பயன்பாடுகள் ஆணைக்குழு மின்சார சபைக்கு அனுமதி வழங்கியுள்ளது. 05

எரிவாயு நிரப்பிய கப்பல்கள் தொடராக வருகை;

## நாட்டில் நேற்று முதல் Gas விநியோகம் வழமைக்கு வந்தது

### வெள்ளி வரை தினமும் 50,000 சிலிண்டர்கள் விநியோகம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஒரு வார காலம் இடைநிறுத்தப்பட்டிருந்த சமையல் எரிவாயு விநியோகம் நேற்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக லிற்றோ கேஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. நேற்று நண்பகல் முதல் சமையல் எரிவாயு விநியோக நடவடிக்கைகள் 05

துமிந்த சில்வாவுக்கு பொது மன்னிப்பா?

## ஜனாதிபதியின் உத்தரவினை இடைநிறுத்தியது உயர் நீதிமன்றம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி வழங்கியுள்ள பொது மன்னிப்பை இடைநிறுத்தி உயர் நீதிமன்றம் நேற்று இடைக்கால தடை உத்தரவொன்றை பிறப்பித்துள்ளது. துமிந்த சில்வாவை மீண்டும் சிறையிலடைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதுடன் அவருக்கான வெளிநாட்டு பயணத் தடையையும் விதித்துள்ளது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர படுகொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த முன்னாள் 05

போலி கடவுச்சீட்டு வழக்கில் சிறை;

## விமல் வீரவங்சவின் மனைவிக்கு பிணை

### கொழும்பு நீதவான் நீதிமன்று உத்தரவு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

சட்டவிரோத இராஜதந்திர கடவுச்சீட்டை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டுக்காக இரண்டு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் விமல் வீரவங்சவின் மனைவி சஷி வீரவன்சவுக்கு கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றம் நேற்று பிணை வழங்கியுள்ளது.

கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்ற பிரதம நீதவான் 05



## UK உள்ளூராட்சி சபை பிரதி மேயராக இலங்கை பெண் 03



## சப்புகஸ்கந்த நிலையம் மீண்டும் செயலிழப்பு 03



## மன்னாரில் 4 கோடி ரூபா தங்கத்துடன் மூவர் நேற்று கைது 03

ஆயிஷாவை தொடர்ந்து மற்றுமொரு கொடூர சம்பவம்;

## வவுனியாவில் காணாமல் போன 14 வயது சிறுமி சடலமாக மீட்பு



### கிணற்றுக்கு அருகே காலணி, புத்தகங்கள் கிடந்தன

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா, கணேசபுரம் பகுதியில் உள்ள கிணற்றிலிருந்து நேற்று முன்தினம் இரவு (30) 14 வயதான சிறுமி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மரணமடைந்த சிறுமியான ராசேந்திரன் யதுசி, தனியார் கல்வி நிலையம் சென்ற நிலையில் நேற்று முன்தினம் மாலை 5.30 வரை சிறுமி வீடு திரும்பவில்லை. இதனையடுத்து குறித்த சிறுமியை தேடிய உறவினர்கள் அவரைக் கண்டு பிடிக்க முடியாமையால் நெளுக்குளம் பொலிஸில் முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து, உறவினர்கள் மற்றும் அயலவர்களின் ஒத்துழைப்புடன் நெளுக்குளம் பொலிஸார், குறித்த சிறுமியைத் தேடும் நடவடிக்கையை முன்னெடுத்தனர். இதன்போது அப்பகுதியில் மக்கள் நடமாட்டமற்ற பகுதி ஒன்றில் காணப்படும் கிணற்றில் இரவு 7.30 மணியளவில் குறித்த சிறுமி சடலமாக கண்டுபிடிக்கப்பட்டார். வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், வவுனியா மாவட்ட 05



உணவு நெருக்கடிக்கு விரைவில் தீர்வு;

## அரிசி தட்டுப்பாட்டுக்கு ஒருபோதும் இடமளியோம்

### தேவையான இறக்குமதிக்கு அரசு நடவடிக்கை



**ஷம்ஸ் பாஹிம்**

பாவனையாளர்களுக்கு தட்டுப்பாடின்றி பெறும் வகையில் மேலும் அரிசி இறக்குமதி செய்யப்பட இருப்பதோடு அரசின் கையிருப்பிலுள்ள நெல்லை அரிசியாக மாற்றி சந்தைக்கு வழங்கவும் நடவடிக்கை 05

"21"ஆவது திருத்த சட்டமூலத்திற்கு

## ஐ.ம.சக்தியினால் ஐந்து யோசனைகள் முன்வைப்பு



நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவினால் முன்வைக்கப்பட்ட அரசியலமைப்பின் 21ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தி ஐந்து யோசனைகளை சமர்ப்பித்துள்ளது.

அதன்படி, குறித்த யோசனைகள் பின்வருமாறு,

ஜனாதிபதி அமைச்சுக்களை வகிக்க முடியாது என்ற 19வது திருத்தத்தின் விதிகளை அரசியலமைப்பில் இணைத்தல். 05

## அரச ஊழியர்களுக்கு இடைக்கால பட்ஜட்டில் சம்பள உயர்வு வழங்கப்படுமா?

**ஷம்ஸ் பாஹிம்**

இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படுமா என்பது தொடர்பாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று தெளிவுபடுத்தினார். இது தொடர்பில் கொள்கை வகுப்போர் 05

## மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் பெண்ணின் சடலம்



தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து நேற்று (31) முற்பகல் உருக்குலைந்த நிலையில் பெண்ணொருவரின்சடலம்மீட்கப்பட்டுள்ளது.

நீர்த்தேக்கத்தில் சடலமொன்று மிதப்பதைக்கண்டு பிரதேசவாசிகள் தலவாக்கலை பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். 05

## சவுதி போன்ற தண்டனையே கொடூர செயல்களை குறைக்கும்

### ஆயிஷா கொலை தொடர்பில் சுரேஷ் MP கருத்து



சவுதி அரேபியாவில் தண்டணைகள் வழங்கப்படுவதைப் போன்ற கொடூர தண்டனைகள், நம்நாட்டிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

பண்டாரகம அட்டுலுகம பகுதியில் மலரும் முன் காய்ந்து சருகாகி காற்றில் கலந்த சிறுமி ஆயிஷாவின் நிலைமைக்கு காரணமான கயவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். 05

## வீடொன்றிலிருந்து தந்தை, மகளது சடலங்கள் மீட்பு




களுத்துறை, ஹினடியங்கல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்து தந்தை மற்றும் மகளின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். 69 வயதுடைய 05

## சர்வதேச செய்திகள்

# தங்கச் சுரங்கத் தொழிலாளர்கள் இடையே மோதல்: 100 பேர் பலி



வடக்கு சாட்டின் தொலைதூரப் பகுதி ஒன்றில் தங்கச் சுரங்க தொழிலாளர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் 100 பேர் வரை கொல்லப்பட்டு மேலும் 40 பேர் காயமடைந்திருப்பதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இருவருக்கும் இடையே ஏற்பட்ட சாதாரண மோதல் தீவிரம் அடைந்திருப்பதாக பாதுகாப்பு அமைச்சர் தாவூத் யாயா ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

லிபிய நாட்டு எல்லைக்கு அருகில் இருக்கும் மலைப்பிரதேசமான கௌரி பௌகுதி மாவட்டம் சாட் மற்றும் அண்டை நாடுகளில் உள்ள சுரங்கத் தொழிலாளர்களை கவர்ந்த பகுதியாகும். கடந்த வாரம் இந்த மோதல் ஏற்பட்டிருப்பதோடு தற்போதே அது பற்றிய விபரம் வெளியாகியுள்ளது.

அந்தப் பகுதியில் அமைதியை ஏற்படுத்த பெரும் எண்ணிக்கையான படையினர் அனுப்பப்பட்டிருப்பதாக ஜெனரல் பிராஹிம் குறிப்பிட்டுள்ளார்.

மொரிடானியா மற்றும் லிபியாவில் இருந்து வந்தவர்களிடையேயே மோதல் ஏற்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

எனினும் இதில் தலையிடச் சென்ற படையினர் மக்கள் மீது சூடு நடத்தி இருப்பதாக மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ரஷ்ய எண்ணெய்க்குத் தடை

## சமரசத்துடன் இணக்கம்

ரஷ்ய எண்ணெய் இறக்குமதியில் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பங்கை முடக்கும் திட்டத்திற்கு ஐரோப்பிய ஒன்றிய தலைவர்கள் இடையே இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

கடல் மார்க்கமாக வரும் எண்ணெய்க்கு மாத்திரமே இந்தத் தடை அமுல்படுத்தப்பட்டுள்ளது. ஹங்கேரியின் எதிர்ப்பால் குழாய் வழி எண்ணெய்க்கு இந்தத் தடை விதிக்கப்படவில்லை.

இந்த உடன்படிக்கை ரஷ்ய போர் இயந்திரத்துக்கான நிதியின் பெரும் அளவை முடக்குவதாக அமையும் என்று ஐரோப்பிய கௌன்சில் தலைவர் சார்ல்ஸ் மிச்சல் தெரிவித்தார்.

27 அங்கத்துவ நாடுகளிடையே இணக்கம் எட்டப்பட்ட பிரசல்ஸ் மாநாடு ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட ஆறு கட்ட தடைகளின் ஓர் அங்கமாகவே இந்தத் தடை கொண்டுவரப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தால் இறக்குமதி செய்யப்படும் எண்ணெய்யில் 27 வீதமும் எரிவாயுவில் 40 வீதமும் ரஷ்யாவில் இருந்து தருவிக்கப்படுகிறது. பதிலுக்கு ஐரோப்பிய ஒன்றியம் ஆண்டுக்கு ரஷ்யாவுக்கு 430 பில்லியன் டொலர்களை செலுத்துகிறது.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ரஷ்யாவின் எரிவாயு ஏற்றுமதியில் இதுவரை எந்தத் தடையும் விதிக்கப்படவில்லை. எனினும் ரஷ்யாவில் இருந்து ஜெர்மனிக்கான புதிய எரிவாயு குழாய் ஒன்றை திறக்கும் திட்டம் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது.

ஹங்கெரியின் கடும் எதிர்ப்புக்கு மத்தியல் ரஷ்ய எண்ணெய் ஏற்றுமதிக்கு தடை விதிப்பது தொடர்பில் தீர்வொன்றை எட்டுவதற்கு பிரசல்ஸில் கடந்த திங்களன்று நடந்த மாநாட்டில் ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகள் பல மணி நேரம் போராட வேண்டி ஏற்பட்டது.

இந்நிலையில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு குழாய் வழியாக வரும் ரஷ்ய எண்ணெய்க்கு தற்காலிகமான




விலக்கு வழங்க இணக்கம் எட்டப்பட்டது என்று மிச்சல் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஹங்கேரி முழுமையான தடையால் தனது பொருளாதாரம் படு மோசமாகப் பாதிக்கப்படும் என்ற வாதத்தை முன்வைத்ததை அடுத்து, அந்த இணக்கம் காணப்பட்டது.

ஸ்லோவாக்கியா மற்றும் செக் குடியரசு போன்ற நிலத்தால் சூழப்பட்ட ரஷ்ய எண்ணெயில் பெரிதும் தங்கியிருக்கும் ஏனைய நாடுகளும் மேலும் கால அவகாசம் கோரி இருந்தன.

இந்த முடிவு தொடர்பான அறிவிப்பு வெளியான சில மணி நேரங்களில் ஐரோப்பிய சந்தைகளில் மசகு எண்ணெய் விலை அதிகரிக்க ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது.

உக்ரைனுக்கு எதிராக படையெடுத்துள்ள ரஷ்யா மீது அதிகபட்ச நெருக்கடியை அளிக்க விரும்புவதாய் ஐரோப்பிய ஒன்றியம் கூறியது.

# மோனா லிசா ஓவியத்தில் கேக்கை வீசியவர் கைது

பிரபல ஓவியர் லியோனார்டோ டா வின்சியின் அழகிய ஓவியமான மோனா லிசாவின் மீது ஒருவர் கேக்கை வீசியுள்ளார்.

பாரிஸிலுள்ள லூவர் அரும்பொருளகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் அந்த ஓவியத்தைக் காணப் பலரும் செல்வது வழக்கம்.

மூதாட்டி போன்று வேடமிட்டுச் சக்கர நாற்காலியில் சென்ற ஆடவர் ஓவியத்தை நெருங்கியதும் திடீரென எழுந்ததாகக் கூறப்படுகிறது. அவர் அதை நோக்கி நடந்து சென்றார். ஓவியத்தைச் சுற்றிக் கண்ணாடிப் பேழை இருந்தது. அதை உடைக்கத் தவறியதால் அந்த ஆடவர் கேக்கை வீசி அந்தப் பேழை முழுவதும் பரப்பினார்.

பின்னர் ரோஜாக்களைத் தூவினார். அங்கு விரைந்த பாதுகாவல் அதிகாரி



கள் அவரைத் தரையில் தள்ளிவிட்டனர்.

அந்த 36 வயது நபர் கைது செய்யப்பட்டு மனநலப் பராமரிப்பு நிலையத்தில் சேர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஓவியர்கள் பூமியின் மீது போதுமான கவனம் செலுத்தாததால் அவர் அவ்வாறு செய்ததாக நம்பப்படுகிறது. 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்த ஓவியம் இதற்கு முன்னரும் தாக்குதலுக்கு இலக்காகி உள்ளது. 1911 ஆம் ஆண்டு அருங்காட்சியக பணியாளர் ஒருவரால் இந்த ஓவியம் திருடப்பட்டது. இது அந்த ஓவியம் மீதான சர்வதேச புகழ் அதிகரிக்கக் காரணமானது.

1956 இல் பொலிவிய நாட்டவர் ஒருவர் ஓவியத்தின் மீது கல்லால் எறிந்து அதன் இடது முழங்கை பகுதியில் சேதத்தை ஏற்படுத்திய சம்பவத்தைத் தொடர்ந்து கண்ணாடி பெட்டியிலேயே வைக்கப்பட்டுள்ளது.

2009இல் பிரான்ஸ் குடியுரிமை பெற முடியாமல் போன கோபத்தில் ரஷ்ய பெண் ஒருவர் இந்த ஓவியத்தின் மீது தேனீர் கோப்பையை வீசி எறிந்ததில் கண்ணாடி பெட்டியில் சிறிய சீறல் ஏற்பட்டது.

# ஐ.நா தலைவருடன் முரளிதரன் சந்திப்பு

ஆட்சியை அடிப்படையாகக் கொண்ட பன்முகத்தன்மைக்கு இந்தியாவின் வலுவான ஆதரவை வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வி. முரளிதரன் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபைத் தலைவர் அப்துல்லா ஷாஹிட்டுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். புலம் பெயர்ந்துள்ள இந்தியர்கள் மத்தியில் உரையாற்றும் போதும் அவர் இதனை சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்கத் தலைமையின் கீழ் 15 நாடுகள் பங்குபற்றிய முரண்பாடுகள் மற்றும் உணவுப் பாதுகாப்பு குறித்த ஐ.நா பாதுகாப்பு சபை உயர்மட்ட திறந்த விவாதத்தில் கலந்து கொண்டிருந்த சமயம் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது முரளிதரன், ஐ.நா பொதுச்சபைத் தலைவர் அப்துல்லா ஷாஹிட், செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரெஸ் உள்ளிட்ட ஏனைய தலைவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பு குறித்து ஐ.நா பொதுச்சபைத் தலைவர் விடுத்துள்ள ட்வீட்டில், உலகளாவிய உணவுப் பாதுகாப்பில் உக்ரைன் நெருக்கடிகளின் தற்போதைய தாக்கம், அது தொடர்பில் ஐ.நா. பாதுகாப்பு சபையில் திறந்த அடிப்படையில் விவாதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.



இரத்தினபுரி நகரை அண்மித்த தாழ்நில பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதை படத்தில் காணலாம்.
(படங்கள்: காவத்தை தினகரன் விசேட நிருபர்)

# டெவோன் நீர் வீழ்ச்சியில் நீர் மட்டம் உயர்வு; மக்களுக்கு எச்சரிக்கை

ஹற்றன் விசேட நிருபர்

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையினை தொடர்ந்து நுவரெலியா மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக மழை பெய்து வருகிறது.

இதனால் டெவோன் நீர்வீழ்ச்சியின் நீர் மட்டம் அதிகரித்துள்ளன, எனவே இந்த நீர் வீழ்ச்சியில் நீராடவோ அருகாமையில் சென்று பார்வையிடவோ வேண்டாம் என மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் பெய்து வரும் கன மழை காரணமாக டெவோன் உட்பட பல நீர் வீழ்ச்சிகளின் நீர் அதிகரித்துள்ளன. எனவே இந்த நீர் வீழ்ச்சிகளுக்கு சமீபமாக வாழ்பவர்கள் மற்றும் நீர் வீழ்ச்சியின் கீழ், ஆற்றுக்கருகாமையில் வாழ்பவர்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.



## மலைச்சாரல்

மத்திய மலைநாட்டில்

# தொடர் மழை; இயல்பு வாழ்க்கை, போக்குவரத்து ஸ்தம்பிதம்

ஹற்றன் விசேட நிருபர்



நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையினை தொடர்ந்து நுவரெலியா மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை முதல் தொடர் மழை பெய்துவருகிறது. நேற்று (31) அதிகாலை முதல் பெய்து வரும் கன மழை காரணமாக பொது போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

தொடர்ச்சியாக பெய்து வரும் மழையுடன் கடும் பனி மூட்டம் காணப்படுவதனால் ஹற்றன், கொழும்பு பிரதான வீதியில் கலுகல, பிட்டவல, கினிகத்தேனை, கடவலை, வட்டவளை உள்ளிட்ட பகுதிகளிலும் ஹற்றன் நுவரெலியா பிரதான வீதியில் குடாஓய, கொட்டகலை, சென்கிளையார், தலவாக்கலை, ரதல்ல, நானுஓயா உள்ளிட்ட பகுதிகளிலும் அடிக்கடி கடும் பனி மூட்டம் நிலவுவதனால் இந்த வீதியினை பயன்படுத்தும் வாகன சாரதிகள் மிகவும் அவதானமாக தங்களுக்குரிய பக்கத்தில் பயணஞ் செய்யுமாறும் போக்குவரத்து பொலிஸார் சாரதிகளிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

குளிர் மற்றும் காற்று காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் மலையக பகுதி நகரங்களில் மக்களின் நடமாட்டம் குறைந்துள்ளதுடன் வர்த்தக நடவடிக்கைகளும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

அடை மழை காரணமாக தேயிலை தோட்டங்களில் தொழிலாளர்களின் வருகை குறைந்துள்ளன. இதனால் தேயிலை உற்பத்தியும் ஓரளவு சரிவடைந்துள்ளதாகவு பெருந்தோட்ட நிர்வாகங்கள் தெரிவிக்கின்றன.

தமிழக நிவாரணப் பொருட்கள்

# இரத்தினபுரி மாட்டத்திற்கும் கிடைக்க வேண்டும்

காவத்தை தினகரன் விசேட நிருபர்

தமிழகத்திலிருந்து இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிவாரணப் பொருட்கள் மற்றும் உலருணவுப் பொருட்கள் இரத்தினபுரி மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என இரத்தினபுரி மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

தமிழக அரசாங்கத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள உதவிகள் இரத்தினபுரி மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை என்றும் மக்கள் அவர்கள் தமது முறைபாட்டில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் மலையக பிரதேசங்கள் மற்றும் கிராமப் புறங்களில் குறைந்த வருமானம் பெறும் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள்.

இம் மக்களுக்கும் தமிழகத்திலிருந்து இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிவாரணப் பொருட்கள் மற்றும் உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட வேண்டும்.

மேற்படி பொருட்கள் பகிர்ந்தளிக்கும் விடயத்தில் பாகுபாடு இன்றி செயல்படுமாறு சம்பந்தபப்பட்டவர்களிடம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

உருக்குலைந்த நிலையில்

# தலவாக்கலை மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் பெண்ணின் சடலம் மீட்பு

ஹற்றன் விசேட நிருபர்

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் உருக்குலைந்த நிலையில் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தலவாக்கலை பொலிஸ் நிலையத்திற்கு பொது மக்கள் வழங்கிய தகவலினையடுத்தே குறித்த சடலம் நேற்று (31) மீட்கப்பட்டுள்ளது.

வீதியில் பொது மகன் ஒருவர் செல்லும் போது மேல் கொத்மலை ஆற்றில் சடலம் ஒன்று மிதந்து வருவதனை கண்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

சடலம் இது வரை அடையாளம் காணப்படவில்லை. சில வாரங்களுக்கு முன்னர் இறந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

இந்த பெண் தற்கொலை செய்து கொண்டாரா அல்லது கொலை செய்து நீர்த்தேக்கத்தில் வீசப்பட்டதா என்பது தொடர்பாக பல்வேறு கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் இது சகல பொலிஸ் நிலையங்களுக்கும் தகவல் வழங்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நுவரெலியா – ஹற்றன் பிரதான வீதியில் பல இடங்களில் மண்மேடு சரிவுகள்

ஹற்றன் விசேட நிருபர்



நுவரெலியா, ஹற்றன் பிரதான வீதியில் பல இடங்களில் மண் திட்டுக்கள், பாரிய கற்கள் புரண்டு வருவதனால் இவ்வீதியினை பயன்படுத்தும் வாகன சாரதிகள் மிகவும் அவதானமாக பயணிக்குமாறு போக்குவரத்து பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நுவரெலியா, ஹற்றன் பிரதான வீதியில் டெஸ்போட் பகுதியில் நேற்று முன்தினம் இரவு மண்மேடு மற்றும் கற்பாறைகள் சரிந்து விழுந்துள்ளன. பல இடங்களில் ஒரு வழி போக்குவரத்தே காணப்படுகின்றன. இதனால் இந்த வீதியினை பயன்படுத்தும் சாரதிகள் மிகவும் அவதானமாக வாகனங்களை செலுத்துமாறு போக்குவரத்து பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் பெய்த தொடர் மழை காரணமாக அவ்வீதியில் பல இடங்களில் மண்திட்டுக்கள் சரிந்து வீழ்ந்துள்ளன.

அத்தோடு சரிந்து விழுந்துள்ள மண் மேட்டினை உடனடியாக அப்புறப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காததன் காரணமாக விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பிருப்பதனால் இதனை உடனடியாக அகற்ற வேண்டுமென சாரதிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN
2022 ஜுன் 1 புதன்கிழமை

தொழுகை நேரம்
01 முதல் 06 வரை
சுபஹ் - 04.32
லுஹர் - 12.10
அஸர் - 03.36
மஃரிப் - 06.24
இஷா - 07.40

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் வைகாசி 18
ராகுகாலம் : பகல் : 12.00 - 01.30வரை
சுபநேரம் : காலை : 09.00 - 10.30வரை
யோகம்: சித்தயோகம்
திதி: துவிதியை



2.2 மில். டொலர் பெறுமதியான

## அத்தியாவசிய மருந்துப் பொருட்களை பங்களாதேஷ் இலங்கைக்கு அன்பளிப்பு



பங்களாதேஷின் உயர்ஸ்தானிகர் தாரிக் ஆரிபுல் இஸ்லாம் 2.2 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான அத்தியாவசிய மருந்துப் பொருட்களை சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவிடம் நேற்று கையளித்தார்.

இந்த நன்கொடையில் புற்றுநோய் எதிர்ப்பு மருந்துகள், உயர் இரத்த அழுத்த எதிர்ப்பு மருந்துகள், ஆண்டி பயடிக் மருந்துகள், வைரஸ் எதிர்ப்பு, வலிப்பு மற்றும் ஆஸ்துமா எதிர்ப்பு மருந்துகள் உட்பட 79 அத்தியாவசிய மருந்துகள் அடங்குகின்றன.

இந்த இக்கட்டான நேரத்தில் இலங்கைக்கு உதவுவதற்கு கிடைத்தது குறித்து பங்களாதேஷ் மகிழ்ச்சியடைவதாகவும், வரலாற்று ரீதியாக இருநாடுகளுக்கும் இடையிலுள்ள தொடர்பின் அடிப்படையில் உதவுவதற்கு இந்த வாய்ப்பை பெற்றமைக்கு பெருமையளிப்பதாகவும் உயர்ஸ்தானிகர்

06

## கச்சதீவு தொடர்பான இந்திய நிலைப்பாட்டில் மாற்றமில்லை

### பிரதமர் மோடி எந்தக் கருத்தும் கூறவில்லை

(ஷம்ஸ் பாஹிம்)



கச்சதீவு தொடர்பில் இந்திய அரசின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. இந்திய பிரதமர் அதுதொடர்பில் எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை என அமைச்சரவை பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார். தமிழ்நாட்டு முதலமைச்சரின் கருத்து இந்திய அரசின் நிலைப்பாடல்ல எனவும் ஒருகாலத்தில் வடக்கு முதலமைச்சராக இருந்த சி.வீ.விக்னேஷ்வரன் இவ்வாறான கருத்துக்களை உலகுக்கு முன்வைத்ததாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கச்சதீவை மீளப்பெற வேண்டும் என தமிழ்நாட்டு முதலமைச்சர் கூறியுள்ளது தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், ஒவ்வொரு மாநில தலைமைகளிடையே மாறுபட்ட நிலைப்பாடுகள் உள்ளன. வடக்கு முதலமைச்சராக இருந்த விக்னேஷ்வரன் உலகிற்கு பல்வேறு கருத்துக்களை கூறியிருந்தார். அவை அரசின் நிலைப்பாடாக கருதப்படாது. அவை அவரின் கருத்து மாத்திரமே. இந்திய பிரதமர் நரேந்திர மோடி இது தொடர்பில் எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை. அரசின் நிலைப்பாட்டில் எந்த மாற்றவும் ஏற்படுவதாகவோ ஏற்படலாம் என்ற சமிக்ஞையே கூட முன்வைக்கப்படவில்லை என்றார்.

## உடன் அமுலாகும் வகையில் வற் வரிகள் அதிகரிப்பு

இன்று முதல் உடன் அமுலாகும் வகையில் வற் வரி 8 சத வீதத்திலிருந்து 12 சத வீதமாகவும் தொலைத்தொடர்பு வரி 11.25 சத வீதத்திலிருந்து 15 சத வீதமாகவும் அதிகரிக்கப்படுவதாக பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

பொதுச் சேவைகளை இடையூறின்றி பேண

## குறைநிரப்பு பிரேரணை சமர்ப்பிக்க அனுமதி

(ஷம்ஸ் பாஹிம்)

அத்தியாவசியமான பொதுச் சேவைகளை இடையூறு இன்றிப் பேணுவதற்குத் தேவையான நிதியை வழங்குவதற்கான குறைமதிப்பீட்டு மதிப்பீட்டை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தேசிய வரவு செலவுத் திணைக்களத்தின் வரவு செலவுத் திட்ட ஆதரவு சேவைகள் மற்றும் அவசரகாலப் பொறுப்புத் திட்டங்களின் கீழ் இதற்காக 695 பில்லியன் ரூபா வழங்கப்படவுள்ளது.

அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நிலவுகின்ற நெருக்கடியான பொருளாதார சூழல் காரணமாக பொதுமக்கள் முகங்கொடுக்க நேரிட்டுள்ள அழுத்தங்களை இயலுமான வரையில் குறைப்பதற்காக சமுர்த்திப் பயனாளிகள், பெருந்தோட்ட மக்கள், ஓய்வூதியர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு 2022 ஆம் ஆண்டின்

06

அட்டுலுகம 9 வயது சிறுமி கொலை

## கைதான சந்தேக நபரிடம் பொலிஸார் தீவிர விசாரணை

அட்டுலுகம பிரதேசத்தில் ஒன்பது வயது சிறுமி படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரிடம் பாணந்துறை மாவட்ட குற்றப் புலனாய்வு பிரிவு தொடர்ந்தும் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. சந்தேக நபரை தடுத்து வைத்து விசாரணை நடத்த நீதிமன்றம் நேற்று முன்தினம் அனுமதி வழங்கியது.இந்த நிலையில் சந்தேகநபரிடம் இருந்து பல முக்கிய தகவல்கள் அம்பலமாகியுள்ளதாக அறிய வருகிறது.

போதைக்கு அடிமையாகியுள்ள குறித்த சந்தேக நபர் தான் குற்றம் செய்திருப்பதாக ஒப்புக்கொண்டிருப்பதாகபொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்கர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகவில்லை என பாணந்துறை பொது வைத்தியசாலையில் இடம்பெற்ற பிரேத பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

சிறுமியின் இறுதிக் கிரியை நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.பெருந்திரளான மக்கள் இதில் கலந்து கொண்டனர்.

## பொருளாதார சவால்களை வெற்றிகொள்வதில் இருதரப்பு ஈடுபாடுகள் குறித்து அமைச்சர் பீரிஸ்

### ஜப்பானிய பிரதித் தூதுவருடன் சந்திப்பு



இலங்கை எதிர்கொள்ளும் தற்போதைய பொருளாதார சவால்களை வெற்றிகொள்வதில் இருதரப்பு ஈடுபாடுகள், உள்நாட்டு அபிவிருத்திகள் மற்றும் சர்வதேச சமூகத்தின் உதவிகள் தொடர்பான விடயங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக ஜப்பான் பிரதித் தூதுவர் கட்சுகி கோட்டாரோ வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிசை அண்மையில் சந்தித்தார்.

குறிப்பாக கோவிட்19 உலகளாவிய தொற்றுநோயின் உச்சக்கட்டத்தின் போது ஜப்பான் அரசாங்கம் வழங்கிய தாராளமான உதவி மற்றும் ஆதரவைப் பாராட்டிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பீரிஸ், இலங்கையின் பொருளாதார சவால்களைத் தணிக்க இருதரப்பு மற்றும் பலதரப்பு வழிகளின் மூலம் ஜப்பானிடம் தொடர்ந்து ஆதரவைக் கோரினார். சர்வதேச நாணய நிதியத்துடன் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை உருவாக்குவதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்ததைத் தொடர்ந்து, இலங்கை அரசாங்கம் பரிஸ் கிளப் கடன் வழங்குநர்கள், ஜி 7 நாடுகள் மற்றும் ஏனைய கடன் வழங்குநர்களிடமிருந்து உதவியைப் பெறுவதாக அமைச்சர் பீரிஸ் விளக்கினார்.

இலங்கையுடன் சர்வதேச சமூகம் தொடர்ந்து

06

## அரச ஊடக நிறுவனங்கள் திறைசேரியில் தங்கியிருக்கும் நிலை மாற்றப்படும்

### புதிய மாற்றங்கள் செய்ய உத்தேசம் அமைச்சர் பந்துல குணவர்தன

(ஷம்ஸ் பாஹிம்)

அரச ஊடக நிறுவனங்களில் முக்கிய மாற்றங்களை செய்து திறைசேரியில் தங்கியிருக்காத நிலையை ஏற்படுத்த இருப்பதாக அமைச்சரவை பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார். இந்த நிறுவனங்களுக்கு 3 மாத காலத்திற்குள் தகுதியானவர்களை நியமிக்க உள்ளதாகவும் சில வேளை தற்பொழுது இருந்தவர்கள் நியமிக்கப்படலாம் அல்லது புதியவர்கள் வரலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரச ஊடக நிறுவனங்களின் தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபை விலகியது குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், புதிய அமைச்சர் நியமிக்கப்பட்ட பின்னர் நியமிக்கப்பட்டிருந்த தலைவர்

06

## UK உள்ளூராட்சி சபை பிரதி மேயராக இலங்கை பெண்



பிரித்தானிய வென்டிஸ்வொர்த் சபை பிரதி மேயராக இலங்கைத் தமிழ் பெண் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தமிழ் குடும்பத்தில் பிறந்த சர்மிளா வரதராஜன் மனித உரிமை ஆர்வலராக செயற்பட்டுள்ளார்.

அவர் புளோரிடா, சுவிட்சர்லாந்து, தாய்லாந்து மற்றும் சிலி ஆகிய நாடுகளில் பட்டப்படிப்பை நிறைவு செய்துள்ளார். மேலும் ஹெர்ட்ஃபோர்ட்ஷயர் பல்கலைக்கழகத்தில் சர்வதேச வணிகத்தில் பட்டம் பெற்றுள்ளார். அவர் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கவுன்சில் மற்றொரு தன்னார்வ தொண்டு நிறுவனம் மற்றும் உலகளாவிய மனித உரிமைகள் அமைப்புகளிலும் இவர் பணியாற்றியுள்ளார்.

## சப்புக்கஸ்கந்த நிலையம் மீண்டும் செயலிழப்பு

### கொதிகலன் குழாய்களில் வெடிப்பு காரணம்




சப்புகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள கொதிகலன்களிலுள்ள (பொய்லர்) 'டர்போஃபேன் 'குழாய்கள் வெடித்தன் காரணமாக எரிபொருள் சுத்திகரிப்பு பணிகளை ஆரம்பிப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாக சப்புகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கடந்த மார்ச் 20 ஆம் திகதியன்று மூடப்பட்டிருந்த சபுகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் 70 நாட்களுக்குப் பின்னர் மீள ஆரம்பிக்கும் முயற்சிகள் நேற்று முன்தினம் (30) முன்னெடுக்கப்பட்டிருந்தது.

06

## முத்தமிழ் அறிஞரின் 99 வது ஜனன தின விழாவும் முதல்வருக்கு நன்றி நவிலலும்




முத்தமிழ் அறிஞர் மு. கருணாநிதி அவர்களின் 99வது ஜனன தின நினைவேந்தலும், பொருளாதார ரீதியாக அல்லலுறும் இலங்கை மக்களுக்கு அத்தியாவசிய தேவைகள் அறிந்து உதவி அளித்து வரும் தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின் அவர்களுக்கான நன்றி நவிலல் நிகழ்வும் எதிர்வரும் 03ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க வினோதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்விற்கு புரவலர் புத்தகப் பூங்காவின் ஸ்தாபகர் புரவலர் ஹாசிம் உமர் முன்னிலை வகிக்க முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் வே. ராதாகிருஷ்ணன், முன்னாள் இந்து சமய கலாச்சார அமைச்சர் பி. பி தேவராஜ் மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணியின் செயலாளர் கே. ரி குருசாமி, ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச் செயலாளர் உமா சந்திரபிரகாஷ் மற்றும் வர்த்தகப் பிரமுகர்கள் ஆன சிவன் தில்லைநாதன், சுப சோலைமலை

06

21ஆவது திருத்தச் சட்டமூலத்தை

## விரைவாக நிறைவேற்றுமாறு போக்குவரத்துச் சங்கங்கள் நீதி அமைச்சரிடம் கோரிக்கை

(ஷம்ஸ் பாஹிம்)



உத்தேச 21ஆவது திருத்தச் சட்டமூலத்தை விரைவாக நிறைவேற்றுமாறு போக்குவரத்துச் சங்கங்கள் நீதி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

உத்தேச சட்டத்தை விரைவாக நிறைவேற்றுமாறு நீதி அமைச்சில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷவிடம் போக்குவரத்துச் சங்கப் பிரதிநிதிகள் கோரிக்கை

06

## மன்னாரில் 4 கோடி ரூபா தங்கத்துடன் மூவர் நேற்று கைது

தலைமன்னார் பகுதியில் இலங்கை சுங்கத்தின் காங்கேசன் துறை பிரிவினரால் 4 கோடி ரூபா பெறுமதியான தங்கத்துடன் சந்தேக நபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக சுங்கப் பேச்சாளர் பிரதிப் பணிப்பாளர் சுதத்த சில்வா தெரிவித்துள்ளார்.

வடமத்திய கடற்படை தலைமையகத்துக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் தலைமன்னார் கடற்பரப்பில் சந்தேக நபர்கள் மூவருடன் தங்கம் கைப்பற்றப்பட்டது.

சந்தேக நபர்கள் புதுக்குடியிருப்பு மற்றும் பேசாலை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என சுங்கப் பேச்சாளர் தெரிவித்தார். சம்பவம் தொடர்பில் இலங்கை சுங்கத்தின் காங்கேசன் துறை பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு அபாயம்; சிவப்பு எச்சரிக்கை



நாட்டில் நிலவும் சீரற்ற வானிலையால் 10 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, புத்தளம், கம்பஹா, கேகாலை, கண்டி, நுவரெலியா, இரத்தினபுரி, கொழும்பு, களுத்துறை, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களுக்கு குறித்த சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த எச்சரிக்கை இன்று (01) காலை 10 மணி வரை அமுலில் இருக்கும் என அந்தத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

நாட்டின் தென்மேற்குப் பகுதியில் நிலவும் மழையுடனான வானிலை இன்று முதல் அடுத்த சில நாட்களுக்கு சற்று அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் புத்தளம் மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 831.93 | கட்டார் ரியால் | 85.92 |
| குவைத் டினார் | 1,028.76 | சவூதி ரியால் | 83.64 |
| ஓமான் ரியால் | 814.75 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் வைகாசி மாதம் 18ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஷவ்வால் பிறை 30

**குறள் தரும் சிந்தனை**



இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன்

*இன்பத்தைத் தேடி அலையாமல், துன்பம் வந்தாலும் அதை இயல்பாகக் கருதிக் கொள்பவன் அந்தத் துன்பத்தினால் துவண்டு போவதில்லை.*

# உணவுப் பயிர்ச்செய்கையில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய காலம்

தற்போது நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற சூழலில் உணவு நெருக்கடியையும் எதிர்கொள்ளக் கூடிய அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் உணவுப் பாதுகாப்பு குறித்து பரவலாகக் கவனம் செலுத்தும் நிலைமை உருவாகியுள்ளது.

இவ்வாறான சூழலில் உணவு பாதுகாப்பு குறித்து விவசாய அமைச்சு அதிகாரிகள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் விஷேட கலந்துரையாடலொன்றை நடத்தியுள்ளார்.

இக்கலந்துரையாடலில் உரையாற்றிய ஜனாதிபதி, உணவு பாதுகாப்பு தொடர்பில் அரச தனியார் கூட்டு வேலைத்திட்டமொன்றை விரிவான முறையில் துரிதமாக ஆரம்பிக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

அத்தோடு 'நாட்டுக்கான பசளைத் தேவையை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் பல நாடுகளுடன் முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன. அதனால் பசளை தட்டுப்பாடு அல்லது வேறு எக்காரணத்தைக் கொண்டும் பருவ பயிர்ச் செய்கையைக் கைவிட வேண்டாம்' என்று விவசாய மக்களிடம் பகிரங்கமாக வேண்டுகோளும் விடுத்துள்ளார்.

அதேநேரம் பசளை கொள்வனவு, அதன் விநியோகம், முறையான முகாமைத்துவம், தெளிவூட்டல் மற்றும் விவசாயிகளுக்கும் அதிகாரிகளுக்கும் இடையிலான ஒருங்கிணைப்புக்கென தேசிய பசளை கொள்கையை உருவாக்குவதன் அவசியம் என்பனவும் இக்கூட்டத்தின் போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்தோடு விவசாயிகளின் விருப்பத்திற்கு ஏற்ப இரசாயன அல்லது சேதனப் பசளையை வழங்கி பயிர்ச்செய்கையை முன்னெடுக்கவும் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

இது பெரிதும் வரவேற்கப்பட வேண்டிய ஆக்கபூர்வமான நடவடிக்கையாகும். இவ்வாறான நடவடிக்கைகளுக்கு கட்சி அரசியல் நலன்களுக்கு அப்பால் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்படுவது அவசியம். இலங்கை எதிர்கொள்ளும் எனத் கூறப்படுகின்ற உணவு நெருக்கடியைத் தவிர்த்துக் கொள்ளும் வகையிலான முன்கூட்டிய நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கு இக்கூட்டமும் நல்ல எடுத்துக்காட்டாகும். இவ்வாறான சூழலில் இலங்கைக்கு 60 ஆயிரம் மெற்றிக்தொன் இரசாயனப் பசளையை இந்தியா அனுப்பி வைத்துள்ளது.

நாலாபுறமும் கடலால் சூழப்பட்ட நாடான இலங்கை, மனிதனின் உணவுத் தேவைக்கு அவசியமான அனைத்து பயிர்களையும் செய்கை பண்ணக் கூடிய வளமான நிலத்தையும் சீதோஷண காலநிலையையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றது. அதேநேரம் உணவு உற்பத்தி பயிர்ச்செய்கைக்குத் தேவையான தண்ணீர் வளத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அவசியமான மழைவீழ்ச்சி வருடம் முழுவதும் கிடைக்கப் பெறக் கூடியதாகவும் உள்ளது. குறிப்பாக வடகீழ் மற்றும் தென்மேல் மற்றும் இரண்டு இடை பருவப்பெயர்ச்சிகள் என நான்கு பருவப்பெயர்ச்சிக் காலநிலை ஊடாக நாட்டுக்கு வருடா வருடம் மழைவீழ்ச்சியும் கிடைக்கப் பெற்ற வண்ணமுள்ளது.

இவ்வாறு கிடைக்கப்பெறும் மழை நீரைச் சேமித்து வைத்துக் கொள்ளக் கூடிய குளங்களும் நீர்த்தேக்கங்களும் நூற்றுக்கணக்கில் நாட்டில் காணப்படுகின்றன. அவற்றில் 163 பாரிய நீர்த்தேக்கங்களும் 2617 சிறு குளங்களும் அடங்கும். மன்னராட்சிக் காலம் முதலே உணவு உற்பத்தி விவசாய நாடாக விளங்கிய இந்நாடு ஒரு காலத்தில் தெற்காசியாவின் நெற்களஞ்சியமாகவும் விளங்கிய பெருமையைக் கொண்டுள்ளது.

இந்தப் பின்னணியில் இலங்கைக்கே உரித்தான நீர்ப்பாசன கலாசாரம் குளத்தையும் வழிபாட்டிடத்தையும் அடிப்படையாகக் கொண்டு உருவாகியுள்ளது.

விவசாய உணவு உற்பத்தியுடன் தொடர்பான பல தனித்துவ பண்புகளைக் கொண்டுள்ள இந்நாடு தற்போது உணவு பற்றாக்குறைக்கு முகம் கொடுக்கும் அச்சுறுத்தலை எதிர்கொள்வது எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாத விடயமாகும்.

இந்த அச்சுறுத்தலை இந்நாட்டில் வாழும் 22 மில்லியன் மக்களும் ஒரு பாரிய சவாலாக கருதி செயற்பட வேண்டும். குறிப்பாக உணவு உற்பத்தி பயிர்ச்செய்கையில் ஒவ்வொருவரும் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை இந்த அச்சுறுத்தல் வலியுறுத்திக் கொண்டிருக்கின்றது.

ஆகவே உணவு உற்பத்தி பயிர்ச்செய்கைக்கு பயன்படக்கூடிய அனைத்து நிலங்களையும் தொழில்நுட்பங்களையும் உச்சளவில் பயன்படுத்த வேண்டிய காலம் இது.

இவ்விடயத்தில் உரிய கவனமும் நடவடிக்கைகயும் முன்னெடுக்கப்படுவது அவசியம். அப்போது உணவுப் பற்றாக்குறை தொடர்பான அச்சுறுத்தலை வெற்றிக் கொள்ளக் கூடியதாக இருக்கும். அதுவே இன்றைய தேவை. அதன் ஊடாக உணவு பற்றாக்குறைக்கு முகம் கொடுக்கக்கூடிய அச்சுறுத்தலைத் தவிர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# இன்றைய நெருக்கடிகளை முறியடித்து இலங்கைத் தேசம் மீண்டெழுவது உறுதி

## இலங்கை மக்களுக்கு உதவியளிக்க தமிழக பரோபகாரிகள் பலர் ஆர்வம்



சென்னையில் உள்ள இலங்கை துணைத் தூதரகம் கடந்த வெள்ளியன்று அதன் தூதரகத்தில் 'இலங்கைக்கு ஆதரவளிப்போம்' (Support Sri Lanka) என்ற நிகழ்வை நடத்தியது. இலங்கை தற்பொழுது பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தத்தளிப்பதை நாம் அறிவோம். இந்த நிகழ்வானது இலங்கைக்கு உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை வழங்குதல், நிதி உதவிகள் பெறுதல் போன்ற செயல் திட்டங்களை ஒருங்கிணைத்து முன்னெடுத்து செல்வதை நோக்கமாக கொண்டதாகும்.

இலங்கை துணைத் தூதர் டொக்டர் டி. வெங்கடேஷ்வரன் இந்தச் சந்திப்பிற்கு தலைமை தாங்கினார். தொழில் முனைவோர் மற்றும் வர்த்தகப் பிரமுகர்கள் திரளானோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களை வரவேற்ற துணைத் தூதர், "இலங்கை ஏற்கனவே பல நெருக்கடிகளைச் சந்தித்துள்ளது. கடந்த காலத்தைப் போலவே இந்த பின்னடைவுகளையும் கடந்து சகஜ நிலைக்குத் திரும்புவோம் என உறுதிபடக் கூறுகிறேன். நட்புறவுமிக்க அண்டை நாடுகள் மற்றும் சார்க் (SAARC) கூட்டமைப்பின் ஆதரவுடன், இலங்கை சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளும்.

பெரிய அளவில் நாம் கவலை கொள்ள அவசியமேதுமில்லை. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கைக்குத் தேவையான அனைத்து ஆதரவையும் உதவிகளையும் இந்தியா வழங்கும் என்று உறுதியளித்துள்ளார். அதுபோன்று தமிழ்நாடு அரசு மற்றும் தமிழ்நாட்டு மக்களின் உதவி மற்றும் அவர்களின் ஆதரவிற்கு இத்தருணத்தில் நான் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்" என்று கூறினார். பரசுராமன் (எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை), ஒளிவண்ணன் (ரோட்டரி முன்னாள் ஆளுநர்), எம்.எஸ்.மதிவாணன் (தொழிலதிபர்), வி.ஜி.சந்தோஷம் (தொழிலதிபர்), வீரமணி (மருந்து நிறுவன இயக்குனர்), சுதாகர் ஜெயராஜ் (ஹோட்டல் அதிபர்), ஸ்ரீஹரன் பாலன் (தலைவர், இந்திய சாகச சுற்றுலா ஒபரேட்டர்கள் சங்கம்), டொக்டர் முத்துக்குமார் (கருத்தரிப்பு வைத்தியசாலையின் _Fertility Hospital பொறுப்பாளர்), வள்ளலார் சபையைச் சேர்ந்த உறுப்பினர்கள் (அருட்பெருஞ்ஜோதி, வடலூர்) மற்றும் இதர முக்கிய பிரமுகர்கள் இந்த நெருக்கடியான தருணத்தில் இலங்கைக்கு உரிய நிவாரண உதவிகளை வழங்குவதாக உறுதியளித்தனர்.

டொக்டர் வெங்கடேஷ்வரன் தனது நன்றியுரையில், இலங்கையில் புதிய ஏற்றுமதி சார்ந்த தொழில்களை தொடங்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். நாட்டின் வருவாய் சுற்றுலா மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை சார்ந்துள்ளது எனக் கூறினார்.



“ஈஸ்டர் தாக்குதல்களும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட கோவிட்19 தொற்றுநோயும் எமது பொருளாதாரத்தின் மீது பெருத்த அடியாக விழுந்தன. தொற்றுநோய் காரணமாக பல இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைகளை இழந்துள்ளனர். ஆனால் புராணங்களில் இலங்கை எப்போதும் ‘குபேர பூமி’ என்று குறிப்பிடப்படுகின்றது. எனவே, இவை தற்காலிக பின்னடைவுகள்தான், எமது நாட்டின் பொருளாதாரம் விரைவில் இயல்பு நிலைக்கு திரும்பும் என உறுதிப்படக் கூறுகிறேன்” என வெங்கடேஷ்வரன் நம்பிக்கை தெரிவித்தார்.

## இலங்கை துணைத் தூதரகம் சென்னையில் நடத்திய Support Sri Lanka நிகழ்ச்சி




இலங்கை துணைத் தூதரகம்
சென்னை

# பாத்திமா ஆயிஷாவுக்கு நேர்ந்த பரிதாபம் போன்று நாட்டில் இனிமேலும் கொடுமை நிகழக் கூடாது!

பண்டாரகம, அட்டுலுகம சிறுமி பாத்திமா ஆயிஷா அக்ரமிற்கு நேர்ந்த கொடுமை மீண்டும் நிகழாத வகையில் சிறுவர்களை பாதுகாப்பற்ற இடங்களுக்கு அனுப்புவதை பெற்றோர் தவிர்க்க வேண்டும் என சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை கோரியுள்ளது.

சிறுமி பாத்திமா ஆயிஷா அக்ரமின் கொலையுடன் தொடர்புடைய 29 வயதான சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டமையை அடுத்து அவரை இரண்டு நாட்கள் தடுத்து வைத்து விசாரணக்கு உட்படுத்த பொலிசாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சிறுமியின் உறவினரான குறித்த சந்தேக நபர் 3, 5, மற்றும் 8 ஆகிய வயதுகளைக் கொண்ட பிள்ளைகளின் தந்தையாவார். அத்துடன் அவரது மனைவி தற்போது கர்ப்பமாக இருப்பதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர். தம்மால் குறித்த சிறுமி கொலை செய்யப்பட்டதாக அவர் பொலிசாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.



பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக சிறுமி பாத்திமா ஆயிஷா கடந்த 27 ஆம் திகதி வீட்டுக்கு அருகில் உள்ள கடை ஒன்றுக்குச் சென்றிருந்தார்.

இதன் பின்னர் அவர் காணாமல் போயிருந்தார். பல மணிநேரம் கடந்தும் சிறுமி ஆயிஷா வீடு திரும்பாத நிலையில், அது தொடர்பில் அவரது பெற்றோர் பண்டாரகமை பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதனையடுத்து குறித்த சிறுமி தமது வீட்டிற்கு அருகில் உள்ள சதுப்பு நிலம் ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார். இந்தநிலையில், இவ்வாறான கொடுமைகள் மீள இடம்பெறாத வகையில் பெற்றோர் தங்களது பிள்ளைகள் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் உதயகுமார அமரசிங்க தெரிவித்தார்.



**பெற்றோர் அவதானமாக செயற்பட்டால், தமது பிள்ளைகளுக்கு ஆபத்து ஏற்படுவதை தவிர்க்க முடியும் என்கிறார் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் உதயகுமார அமரசிங்க**

சிறுமி பாத்திமா ஆயிஷா, தமது பெற்றோர் அல்லது பாதுகாவலருடன் சென்றிருந்தால் இவ்வாறு பரிதாபம் நேர்ந்திருக்காது.

இவ்வாறு மீள நிகழாத வகையில் சிறுவர்களை பாதுகாப்பற்ற இடங்களுக்கு அனுப்புவதை தவிர்க்க வேண்டும். சந்தேகத்திற்குரிய நபர்களுடன் சிறுவர்கள் பேசுவதைத் தடுக்க வேண்டும்.

நன்கு அறிந்தவர்களால் சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. எனவே, அவ்வாறான செயற்பாடுகள் நிகழாத வகையில் பெற்றோர் அவதானமாகச் செயற்பட வேண்டும் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் உதய குமார அமரசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, கொலை செய்யப்பட்ட சிறுமி பாத்திமா ஆயிஷா அக்ரமின் இறுதிக் கிரியை நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றது. சிறுமியின் ஜனாஸா நல்லடக்கத்தில் பெரும் திரளான முஸ்லிம் மக்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.


# முழுமையான ஊட்டச்சத்துகளை வழங்குகின்ற நிறையுணவு பால்

பால் சார்ந்த உணவுகள் நம் அன்றாட வாழ்வில் பால் பிரதானமாகி விட்டன. 10,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கால்நடைகள் மூலம் பால் பொருட்களை மனிதர்கள் உட்கொண்டுள்ளனர் என்பதை சில வரலாற்றுப் பதிவுகள் காட்டுகின்றன.அது ஒரு அவசியமான உணவாக மட்டுமல்லாமல் கலாசார சிறப்பம்சத்தையும் கொண்டுள்ளது.

ஐ.நாவின் உணவு மற்றும் விவசாய அமைப்பானது (FAO), உலக பால் தினமாக ஜூன் 01 ஆம் திகதியை அறிவித்து 22 வருடங்கள் ஆகின் றது. இதன் மூலம் நமது உணவு முறைகளிலும் அன்றாட வாழ்விலும் பாலின் முக்கியத்துவம் எடுத்துக் காட்டப்படுகிறது.

பாலை முழுமையாக 100% வீட்டில் வளர்க்கும் கால்நடைகளில் இருந்து பெறுகின்ற நாட்டின் முன்னணி பால் உற்பத்தியாளர்களான Pelwatte Dairies நிறுவனம், நமது உணவில் பாலின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது. பாலை அடிப்படையாகக் கொண்ட தயாரிப்புகள் எம்மை ஆரோக்கியமாகவும் உறுதியாகவும் வைத்திருக்க உதவுவதோடு மட்டுமல்லாமல், ஒரு சில ஆராய்ச்சிகளிள் முடிவுகளின் அடிப்படையில், ஒரு சில எலும்பியல் சிக்கல்களைத் தவிர்க்கவும் பால் உதவுகிறது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த பெல்வத்தையின் முகாமைத்துவப் பணிப்பாளர் அக்மல் விக்ரமநாயக்க, “பால் என்பது வெறுமனே பொதி செய்து விற்கப்படும் ஒரு பொருளல்ல, அது ஒரு முக்கிய சின்னமாகும். ஒரு சிலருக்கு அது ஒரு வாழ்க்கை முறை அம்சமாகும், ஏனெனில் அது அவர்களின் அன்றாட உணவுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது. சிலருக்கு அது அவர்களின் பிரதான போசாக்கை வழங்கும் உணவாகும். விற்றமின் A மற்றும் B12 உள்ளிட்ட பல அத்தியாவசிய விற்றமின்களை பால் உள்ளடக்கியுள்ளதால், அது வழங்கும் நன்மைகள் எல்லா வயதினரையும் சென்றடைகின்றன. அத்துடன் சிலவித நோய்களைத் தடுக்க முடியுமென நம்பிக்கை தரும் பல ஆராய்ச்சிகள் வெளிப்படுத்துகின்றன" என்றார்.




பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கும் மேலாக மனிதர்கள் தங்கள் உணவில் பாலை சேர்த்து வருகின்றனர். காரணம் இது ஒரு வலுவான சக்தி மூலமாகும் என்று அவர்கள் நம்பினர். பாலில் மனித உடலுக்கு உகந்த உயர்தர புரதங்கள் இருப்பதே இதற்குக் காரணமாகும். ஒரு குவளை பாலில், புரதம், கல்சியம், விற்றமின் D, விற்றமின் B12, பொட்டாசியம், பொஸ்பரசு, செலேனியம் (Se) ஆகியன உள்ளன. இவை அனைத்தும் பொதுவாக உலகத்தில் போதுமான அளவு உட்கொள்ளப்படாத போசணைகளாக கருதப்படுகின்றன.

குறிப்பாக விற்றமின் E மற்றும் பீட்டா கரோட்டின் போன்றன கட்டிகள், வீக்கங்களைக் குறைப்பதோடு ஒட்சியேற்ற அழுத்தத்தை எதிர்த்துப் போராடுகின்றன என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எனவே, சிறந்த தரத்திலான பாலை உட்கொள்வது மிகவும் முக்கியமாகும்.

அதிக கவனம் செலுத்த வேண்டிய ஒரு மிக முக்கியமான ஊட்டச்சத்து பாலில் உள்ள புரத உள்ளடக்கமாகும். நிச்சயமாக நீங்கள் இறைச்சி மற்றும் தாவர அடிப்படையிலான புரத உள்ளடக்கம் உள்ளிட்ட பல்வேறு வழிகளில் புரதத்தை பெறக் கூடியதாக இருக்கலாம். ஆனால், பால் ஒரு 'பூரண உணவு' (முழுமையான புரதம்) என அறியப்படுகிறது. முழுமையான புரதம் என்பது, 9 அத்தியாவசிய அமினோ அமிலங்களைக் கொண்ட புரதங்கள் ஆகும். பாலில் காணப்படும் புரதம் விளையாட்டு வீரர்களுக்கும் மிகவும் சுறுசுறுப்பான வாழ்க்கை முறையை வாழ்பவர்களுக்கும் நன்மையளிக்கின்றன. குறிப்பாக பாலிலுள்ள தனித்துவமான சங்கிலி அமினோ அமிலங்கள் இருப்பதால், அவை தசைகளை கட்டமைக்கவும் சீரமைக்கவும் உதவுகிறது.

எமது எலும்பு மற்றும் எலும்பியல் ஆரோக்கியத்திற்கு பால் எவ்வளவு முக்கியம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. பாலில் இருந்து பெறப்படும் கல்சியம் எமது உடலால் எளிதில் உறிஞ்சப்படுவதால், பாலானது கல்சியத்தின் சிறந்த மூலமாகும். பாலில் விற்றமின் D, விற்றமின் K, பொஸ்பரஸ், மெக்னீசியம் போன்ற போசணைகள் காணப்படுவதால் கல்சியத்தை உடல் எளிதில் உறிஞ்சிக் கொள்ள முடிகின்றது.கல்சியம், பற்கள் மற்றும் எலும்புகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது. உங்கள் உணவில் சிறந்த அளவில் கல்சியம் இருப்பதானது, என்புருக்கி (ஒஸ்டியோபோரோசிஸ்) போன்ற எலும்பு சார்ந்த நோய்களிலிருந்து உங்களுக்கு பாதுகாப்பளிக்கிறது. குறிப்பாக வயதானவர்களுக்கு என்பு முறிவு போன்ற அபாயத்தைக் குறைக்கிறது. கல்சியமானது, எலும்பு ஆரோக்கியத்திற்கு மட்டுமன்றி, குருதி உறைதல் போன்ற ஏனைய உடல் செயல்பாடுகளிலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

ஊட்டச்சத்தை வழங்குவதன் அடிப்படையில் பால் பெரும் மதிப்கைக் கொண்டுள்ளதோடு மட்டுமல்லாமல், அதை உங்கள் உணவில் சேர்ப்பது நடைமுறையில் அர்த்தமுள்ளதாக அமைகிறது. பாலானது, சுவையூட்டப்பட்ட பால் உள்ளிட்ட பாலாடைக்கட்டி, யோகட், வெண்ணெய் போன்ற பல்வேறு சுவையான வடிவங்களை கொண்டுள்ளது. இது குடும்பத்தின் உணவில் உள்ளெடுக்கப்படக் கூடிய சிறந்த போசாக்கு ஆகும். ஏனெனில் ஐஸ்கிறீம் மற்றும் யோகட் போன்ற சுவையான உணவுகளை குழந்தைகளும் விரும்புகின்றனர்.

எஸ். கவிந்தன்

## அரச ஊழியர்களுக்கு இடைக்கால பட்ஜட்டில்...

தீர்மானிப்பர் எனவும் மூலதனச் செலவுகளை குறைத்து முடியுமான துறைகளுக்கு நிவாரணம் வழங்க முன்னுரிமை வழங்குவதாக பிரதமர் அறிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அரச மற்றும் தனியார் ஊழியர்களுக்கு இடைக்கால வரவு செலவுத்திட்டத்தில் சம்பள உயர்வு வழங்கப்படுமா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், மக்களின் வரிப்பணத்தில் இருந்து தான் சம்பளம் வழங்க வேண்டும். 2020 இல் மொத்த வரி வருமானத்தில் 86 வீதம் அரச ஊழியர்களின் சம்பளத்திற்கும் ஓய்வூதியத்திற்கும் செலவிடப்பட்டுள்ளது.

இதனால் பெற்ற கடனுக்கு வட்டி செலுத்துவதும் சமுர்த்தி கொடுப்பனவு வழங்குவதும் சிக்கலாகிறது.

அரச நிதி முகாமைத்துவச் சட்டம் உரிய வகையில் பின்பற்றப்படாததால் இந்த சிக்கல் ஏற்பட்டது. செலவுகளை குறைத்து மக்களை வாழ வைக்கும் விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.கொள்கை வகுப்போர் தொழில்நுட்ப ரீதியாக ஆராய்ந்து சம்பள விடயம் குறித்து முடிவு செய்வர்.

மூலதனச் செலவுகளை குறைத்து முடியுமான துறைகளுக்கு நிவாரணம் வழங்க முன்னுரிமை வழங்குவதாக பிரதமர் அறிவித்துள்ளார்.

## சவுதி போன்ற தண்டனையே...

சவுதியில் போன்று, சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டும்.

குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

ஆயிஷாவின் பேரிழப்பே இவ் அவலங்களுக்கு முற்றுப்புள்ளியாக இருக்கட்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

## வீடொன்றிலிருந்து தந்தை,...

தந்தை மற்றும் 33 வயதுடைய மகள் ஆகிய இருவரின் சடலங்களே நேற்று முன்தினம் (30) இரவு குறித்த வீட்டிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. தந்தை வீட்டில் நாற்காலியில் சடலமாக காணப்பட்டதாகவும், மகள் வீட்டின் அறையில் சடலமாக மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். சடலங்கள் நேற்று முன்தினம் இரவு களுத்துறை நாகொட பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளன. இந்த மரணங்கள் கொலையா அல்லது தற்கொலையா என்பது குறித்து பொலிஸார் பலகோணங்களில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டில் நேற்று முதல்...

வழமைக்குத் திரும்பியுள்ளதாக தெரிவித்துள்ள அந்த நிறுவனம்,

தொடர்ந்து எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை தட்டுப்பாடின்றி சமையல் எரிவாயு விநியோகத்தை மேற்கொள்ள முடியும் எனவும் தினமும் 50,000 எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் நேற்று தெரிவித்தது.

நேற்று கொழும்பின் பல்வேறு பகுதிகளுக்கும் விநியோக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அந்த நிறுவனம் காலி, மாத்தறை, குருநாகல்,யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கும் நேற்று பிற்பகல் சமையல் எரிவாயு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களுக்கு அதில் 60 வீதமான கேஸ் சிலிண்டர்கள் விநியோகிக்கப்படும் என தெரிவித்துள்ள அந்த நிறுவனம் அதற்கமைய 30 ஆயிரம் சிலிண்டர்களை இந்த இரண்டு மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிப்பதாகவும் இந்த வார இறுதியில் மேலும் 2500 மெட்ரிக் தொன் சமையல் எரிவாயுடனான கப்பல் நாட்டை வந்தடையும் என்றும் தெரிவித்துள்ளது.

நேற்றைய தினமும் சில பகுதிகளில் சமையல் எரிவாயுவுக்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்ததையும் சில பகுதிகளில் அவர்களுக்கு டோக்கன் விநியோகம் நடைபெற்றதையும் காணமுடிந்தது. அதேவேளை பெரும்பாலும் கொழும்பின் பல்வேறு பகுதிகளிலும் நேற்றையதினம் சமையல் எரிவாயு சிலிண்டர் விற்பனை நடவடிக்கைகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டதையும் காண முடிந்தது. (ஸ)

## ஜனாதிபதியின் உத்தரவினை...

பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொதுமன்னிப்பு வழங்கியிருந்தார். அந்த பொது மன்னிப்பை இடைநிறுத்தியே உயர்நீதிமன்றம் நேற்று இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்ததுடன் துமிந்த சில்வாவை மீண்டும் சிறையில டைக்குமாறு உத்தரவிட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்த விரைவான நடவடிக்கை எடுக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதுடன் அதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் உதவிகளை வழங்குமாறு சட்டமா அதிபருக்கும் உத்தரவிட்டுள்ளது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் மகளான ஹிருணிக்கா பிரேமச்சந்திர, அவரது மனைவி சுமனா பிரேமச்சந்திர மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் கஸாலி ஹூசைன் ஆகியோர் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பை சவாலுக்கு உட்படுத்தி மூன்று அடிப்படை உரிமை மனுக்களை தாக்கல் செய்திருந்தனர். நீதியரசர்களான ப்ரீத்தி பத்மன் சூரசேன,யசந்த கோதாகொட மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகியோரடங்கிய நீதியரசர்கள் குழாம் இந்த மூன்று அடிப்படை உரிமைகளையும் விசாரிப்பதற்கு அனுமதி வழங்கி மேற்படி உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

மேற்படி மனுக்கள் மீதான பரிசீலனை செப்டம்பர் 1ஆம் திகதி ஆரம்பிக்கப்பட வுள்ளது (ஸ)

## விமல் வீரவன்சவின்...

நந்தன அமரசிங்க அவரை பிணையில் விடுதலை செய்யுமாறு நேற்று உத்தரவிட்டுள்ளார்.

அதற்கிணங்க 50,000 ரூபா பிணை மற்றும் 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் அவரை விடுதலை செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அதேவேளை, அவரது வெளிநாட்டு பயணங்களை தடை செய்யுமாறும் நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். போலி கடவுச்சீட்டு வழக்கு தொடர்பில் இரண்டு வருடங்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவின் மனைவி சசி வீரவன்ச தாக்கல் செய்த பிணை கோரிக்கை மனு நேற்று கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றத்தினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதற்கிணங்க போலி ஆவணங்களை வைத்து கடவுச்சீட்டை தயாரித்ததாக குற்றம் சாட்டப்பட்டு அவருக்கு இரண்டு வருட சிறைத் தண்டனையும் ஒரு இலட்சம் ரூபா அபராதமும் கடந்த வாரம் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டது.

கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை சவாலுக்கு உட்படுத்தும் வகையில் சசி வீரவன்ச தமது சட்டத்தரணி மூலமாக மேன்முறையீடு ஒன்றை மேற்கொண்டிருந்தார்.மேற்படி மேன்முறையீட்டு மனு தொடர்பான பரிசீலனை நேற்றைய தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று சசி வீரவன்ச நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். அதன்போது சஷி வீரவன்சவை பிணையில் விடுவிப்பதற்கான உத்தரவை கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்ற நீதவான் நேற்று பிறப்பித்துள்ளார்.அத்துடன் அவரது வெளிநாட்டு பயணங்களை தடை செய்யவும் அவர் உத்தரவிட்டுள்ளார்.(ஸ)

## வவுனியாவில் காணாமல்...

உதவி பொலிஸ் அத்தியட்சகர், வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, தடயவியல் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் சம்பவ இடத்துக்கு அழைத்து வரப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

கிணற்றிலிருந்து 50 மீற்றர் தூரத்திலுள்ள மரம் ஒன்றின் கீழ்ப் பகுதியில் சிறுமியின் காலணி மற்றும் புத்தகங்களும் மீட்கப்பட்டுள்ளன. மோப்ப நாயின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் மோப்ப நாய் கிணறு அமைந்துள்ள பகுதியிலிருந்து 100 மீற்றர் தூரத்திலுள்ள காணியில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்தில் தஞ்சம் அடைந்திருந்தது.

குறித்த பாவனையற்ற வர்த்தக நிலையத்தில் மதுபான போத்தல்கள் மற்றும் கயிறும் காணப்பட்டுள்ளன.

இரவு 11.45 மணியளவில் தடயவியல் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்திருந்து பொதுமக்களின் உதவியுடன் சிறுமியின் சடலத்தினை கிணற்றிலிருந்து மேலே எடுத்தனர்.

சிறுமியின் மரணத்திற்கான காரணம் விசாரணைகளின் பின்னரே தெரிவிக்க முடியும் என பொலிஸார் தெரிவித்தனர்.

## ஐ.ம.சக்தியினால் ஐந்து...

சட்ட சபையின் பரிந்துரையின் பேரில் மத்திய வங்கியின் ஆளுநருக்கு மேலதிகமாக நாணயச் சபையின் ஏனைய உறுப்பினர்களை நியமித்தல்.

தேசிய முன்னுரிமைகள் மற்றும் மதிப்பீட்டு ஆணையத்தை ஒரு சுயாதீன ஆணையமாக நியமித்து அதன் உறுப்பினர்களை சட்ட பேரவையின் பரிந்துரையின்படி நியமித்தல்.

ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட ஆளுங் கட்சியின் அனைத்து அலுவலகப் பணியாளர்களும் சொத்துக்கள் மற்றும் கடன்கள் பற்றிய அறிவிப்புகளை வெளியிடுவதைக் கட்டாயமாக்குதல். அவ்வாறு செய்யத் தவறினால் கடுமையான தண்டனைகளுக்கான சட்டக் கட்டமைப்பை உருவாக்குதல்.

திருடப்பட்ட சொத்துக்களை மீளப்பெறுவதில் இலங்கை அரசாங்கம் ஒரு தரப்பினராக இருந்து, சர்வதேச உடன்படிக்கைகளை அங்கீகரிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளை உள்ளடக்குதல் ஆகிய ஐந்து யோசனைகளையும் முன்வைத்துள்ளது.

## அரிசி தட்டுப்பாட்டுக்கு...

எடுத்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். விவசாயிகளுக்கு தேவையான பசளையை பெற பணம் வழங்கும் திட்டமொன்றை ஆரம்பிக்க உள்ளதாக குறிப்பிட்ட அவர், அடுத்த வருடம் முதல் அரிசி இறக்குமதி நிறுத்தப்படும் எனவும் குறிப்பிட்டார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் நேற்று கருத்துத் தெரிவித்த அவர், உணவு நெருக்கடிக்கு தீர்வு காண பல்வேறு திட்டங்களை முன்னெடுப்பது குறித்தும் அமைச்சரவை ஆராய்ந்ததாகவும் தெரிவித்தார். ரஷ்ய உக்ரேன் யுத்தம் காரணமாக பசளை பெறுவதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. காலநிலை மாற்றம் காரணமாகவும் பல நாடுகளுக்கு தாக்கம் ஏற்பட்டுள்ளது. எமது நாட்டுக்கு இவை தவிர பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்க நேரிட்டுள்ளது.கடந்த போகங்களில் போதிய அருவடை கிடைக்கவில்லை. சில பகுதிகளில் விவசாயிகள் இன்னும் வயலுக்கு இறங்கவில்லை. விவசாயிகளுக்கு சேதனப் பசளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். இரசாயன பசளை பெறுவது குறித்து பல நாடுகளுடன் பேசி வருகிறோம். 7 நாட்டு தூதுவர்களிடம் எழுத்துமூலம் கோரியுள்ளோம். இந்தியாவில் இருந்து 65 ஆயிரம் மெற்றிக் தொன் பசளை பெறும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மிலிந்த மொரகடவுடன் பேசினேன். பசளை கிடைக்கும் வரை வயலுக்கு செல்வதற்கு காத்திருக்காமல் பசளை கிடைக்கும் நம்பிக்கையுடன் வயலில் இறங்குமாறு விவசாயிகளை கோருகிறோம். தனியார் துறைக்கு இரசாயன பசளை கொள்வனவு செய்வதற்கு வாய்ப்பு அளித்து சந்தையில் இரசாயன பசளை தடையின்றி கிடைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

பெரும்போகத்திற்கு தேவையான விதை நெல்லை சந்தையில் இருந்து பெற்று வழங்க இருக்கிறோம். அரிசி தட்டுப்பாடு காணப்படுகிறது. அரிசி இறக்குமதி செய்வதற்கு வர்த்தக அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

3இலட்ச38 ஆயிரம் மெற்றிக் தொன்னுக்கும் அதிகமாக தொகை அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் அரிசி கொண்டுவரப்பட உள்ளது. பாவனையாளருக்கு பாதிப்பு ஏற்படாதவாறு அரிசி இறக்குமதி செய்யப்படும். கையிருப்பில் உள்ள 40 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லை, அரிசியாக மாற்றி சதொச ஊடாக வழங்க இருக்கிறோம் என அமைச்சர் கூறியுள்ளார்.

## அரச வருமானத்தை அதிகரிக்க...

வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் கீழ்க்காணும் சட்டங்களை திருத்தம் செய்வதற்குத் தேவையான சட்டமூலங்களைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரான பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டம், 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர் பெறுமதி வரிச் சட்டம், 2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க தொலைத்தொடர்பு அறவீட்டுச் சட்டம்,1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க பந்தயங்கள் மற்றும் சூதாட்ட வரிச் சட்டம், 2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டம் என்பவற்றை திருத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மொத்தத் தேசிய உற்பத்தியை கணிப்பிடல், பொருளாதாரத்தின் உண்மையான கட்டமைப்பை சரியான வகையில் அடையாளங் காணல், பொருளாதார வளர்ச்சி வேகம் தொடர்பான பெறுமதிகளை சரியான வகையில் மதிப்பீடு செய்தல், தேசிய கணக்குகள் தொடர்பாக ஏற்புடைய சர்வதேச நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய பரிந்துரைகள் மற்றும் பொறிமுறைகளைக் கையாளல் போன்ற விடயங்களைக் கருத்தில் கொண்டு குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை தேசிய கணக்குகள் மதிப்பீடு செய்யும் அடிப்படை ஆண்டு இற்றைப்படுத்தப்படும். அதற்கமைய, தேசிய கணக்குகளைத் தயாரிக்கும் போது தற்போது அடிப்படையாகக் கொண்டுள்ள 2010 ஆண்டுக்குப் பதிலாக அடிப்படை ஆண்டாக 2015 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## பொது மக்களுக்கு நிவாரணம்...

மற்றும் அவசரகாலப் பொறுப்புத் திட்டங்களின் கீழ் இதற்காக 695 பில்லியன் ரூபா வழங்கப்படவுள்ளது.

அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. நிலவுகின்ற நெருக்கடியான பொருளாதார சூழல் காரணமாக பொதுமக்கள் முகங்கொடுக்க நேரிட்டுள்ள அழுத்தங்களை இயலுமான வரையில் குறைப்பதற்காக சமுர்த்திப் பயனாளிகள், பெருந்தோட்ட மக்கள், ஓய்வூதியர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு 2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அரசாங்கத்தால் சலுகைப் பக்கேஜ் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டது.

அதற்கான செலவுகளை மேற்கொள்வதற்கும், அத்தியாவசிய அரச சேவைகளைத் தடைகளின்றி தொடர்ச்சியாக மேற்கொண்டு செல்வதற்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்வதற்காகவும் குறைநிரப்பு மதிப்பீடொன்றை சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## கடும் மழையுடனான...

முதல் தொடர்ச்சியாக மழைவீழ்ச்சி பதிவாகி வருகிறது.இந்த நிலையில் கொழும்பில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

நாட்டில் நிலவும் கடும் மழையுடனான சீரற்ற காலநிலையினால் கங்கைகள் மற்றும் ஆறுகள் பல பெருக்கெடுத்துள்ள நிலையில் வெள்ளப்பெருக்கு ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.எதிர்வரும் 48 மணித்தியாலங்களில் மேற்படி கங்கைகள் , ஆறுகளை அண்டிய பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படலாம் எனவும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலையால் 10 மாவட்டங்களில் தொடர்ந்து மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடும் மழையுடனான சீரற்ற காலநிலை தொடரும் நிலையில் பலபகுதிகளில் 100 மி.மீ வரை மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 50 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும்.

மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ளதேவையானமுன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.இதேவேளை இந்த நிலையில் காலிமுகத்திடல் பகுதியில் பலத்த காற்று காரணமாக கோட்டாகோகம பகுதியில் போராட்டக்காரர்களின் கூடாரங்கள் தூக்கி எறியப்பட்டு சேதமடைந்துள்ளன. எனினும் ஆர்ப்பாட்டக்காரர்கள் சீரற்ற காலநிலையையும் பொருட்படுத்தாது தமது ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக் கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 3045 கிலோ மீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.புத்தளத்திலிருந்து மன்னார் மற்றும் காங்கேசந்துறை ஊடாக திருகோணமலை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் காலியிலிருந்து மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50,60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

ஆறுகளின் நீர்மட்டம் அதிகரிப்பு

கடும் மழை காரணமாக களனி கங்கை, ஜின் கங்கை, நில்வலா கங்கை மற்றும் அத்தனகல ஓயா ஆகியவற்றின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதில் அவதானமாக செயற்பட வேண்டும் எனவும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## அத்தியாவசிய மருந்துப்... 03ஆம் பக்கத் தொடர்

தெரிவித்தார். எதிர்காலத்தில் இலங்கைக்கு சகல வழிகளிலும் உதவுகதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சரியான நேரத்தில் நன்கொடை வழங்கியதற்கு பங்களாதேஷ் அரசாங்கம் மற்றும் பங்களாதேஷ் மக்களுக்கு நன்றி தெரிவித்த அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்த விருப்பம் தெரிவித்தார்.

உயர்ஸ்தானிகரும் அமைச்சரும் இரு நாடுகளும் மருந்துத் துறையில் எவ்வாறு ஒத்துழைப்பது மற்றும் மருத்துவத் துறையில் மனித வளங்களை பரிமாறிக் கொள்வது குறித்தும் கலந்துரையாடினர். (பா)

## அரச ஊடக நிறுவனங்கள்... 03ஆம் பக்கத் தொடர்

உள்ளிட்ட பணிப்பாளர் சபை விலக வேண்டும். அதன் பின்னர் அவர்களின் செயற்பாடுகளை ஆராய்ந்து லேக்ஹவுஸ் ,ரூபவாஹினி கூட்டுத்தாபனம். ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம். ஐ.ரி.என் என்பன கடந்த காலத்தில் மக்களின் வரிப்பணத்தில் தான் நிர்வகிக்கப்பட்டன. தேசிய பொறுப்பை மேற்கொள்ளும் அதே வேளை மக்களின் வரிப்பணத்தில் தங்கியருக்காத தரமான சிறந்த மாற்றங்களை மேற்கொள்ள இருக்கிறேன். உயர்ந்த ஊடகக் கலாச்சாரத்தை ஏற்படுத்துவதற்காக தகுதியானவர்களை நியமிக்க இருக்கிறேன். சில வேளை தற்பொழுது உள்ளவர்கள் மீள நியமிக்கப்படலாம். அல்லது புதியவர்கள் தெரிவாகலாம். 3 மாத காலப்பகுதிக்குள் மாற்றங்கள் செய்யப்படும். ஏனைய அமைச்சுகளிலும் சாதகமான மாற்றங்கள் செய்யப்படும்.

## பொருளாதார சவால்களை... 03ஆம் பக்கத் தொடர்

ஈடுபடுவதே பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்கான திறவுகோல் எனக் குறிப்பிட்ட இரு தரப்பினரும் மேலும் ஒத்துழைப்பை எவ்வாறு பலப்படுத்துவது என்பது குறித்து கலந்துரையாடப்பட்டது.

இந்த நிலையில், இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கு நிலையான தீர்வுகளைக் காண்பதில் ஜப்பானிய அரசாங்கத்தின் ஆதரவை ஜப்பான் தூதுவர் மீண்டும் வலியுறுத்தினார்.

இந்த சந்திப்பின் போது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் ஜப்பான் தூதரகத்தின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

## குறைநிரப்பு பிரேரணை... 03ஆம் பக்கத் தொடர்

ஆரம்பத்தில் அரசாங்கத்தால் சலுகைப் பக்கேஜ் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டது.

அதற்கான செலவுகளை மேற்கொள்வதற்கும், அத்தியாவசிய அரச சேவைகளைத் தடைகளின்றி தொடர்ச்சியாக மேற்கொண்டு செல்வதற்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்வதற்காகவும் குறைநிரப்பு மதிப்பீடொன்றை சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## முத்தமிழ் அறிஞரின்... 03ஆம் பக்கத் தொடர்

தேவர் மற்றும் தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், வீரகேசரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எஸ். ஸ்ரீ கஜன் ஆகியோர் கலந்து கொள்வர்.

கலைஞர் கருணாநிதி குறித்த நினைவுப் பேருரையை பேராசிரியர் அருளானந்தம் சர்வேஸ்வரன் கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் உடுவை எஸ். தில்லை நடராஜா வீரகேசரி பிரதம ஆசிரியர் எஸ் ஸ்ரீ கஜன் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச் செயலாளர் உமா சந்திர பிரகாஷ் ஆகியோர் நிகழ்த்துவார். கவி வாழ்த்தினை இளநெஞ்சன் முர்சுதீன், திருமதி. யோகேஸ்வரி லோகநாதன் காத்தான்குடி மவுலவி பௌவுஸ் ஜனரஞ்சக எழுத்தாளர் மலிவான கவிதாயினி சிமாரா அலி ஆகியோர் நிகழ்த்த விழாவில் பத்திரிகை ஆசிரியர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், கல்விமான்கள் என பலரும் கலந்து கொள்ள உள்ளனர்.

இந்த நிகழ்ச்சியை இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன சிரேஷ்ட அறிவிப்பாளர் பி. சீதாராமன் தொகுத்து வழங்குவார்.

## விரைவாக நிறைவேற்றுமாறு... 03ஆம் பக்கத் தொடர்

விடுத்துள்ளனர். நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு விரைவாக தீர்வு காண்பதற்கு 21 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டமூலத்திற்கு ஆதரவளிப்பது பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அனைவரினதும் பொறுப்பாகும் என அவர்கள் தெரிவித்தனர்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் சூழ்நிலை காரணமாக அரசியலமைப்பின் 21வது திருத்தத்தை கொண்டு வருவதன் முக்கியத்துவம் குறித்து போக்குவரத்து சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு நீதி அமைச்சர் விளக்கினார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய நீதியமைச்சர், நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு அரசியல் ஸ்திரத்தன்மை அவசியமானதனால் அரசியலமைப்பின் 21வது திருத்தத்தை கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

20ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் இல்லாதொழிக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களை 21ஆவது திருத்தச் சட்டம் வலுப்படுத்துவதாகவும், இது தொடர்பில் அனைத்து தரப்பினருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன, அகில இலங்கை பாடசாலை மாணவர் போக்குவரத்து சங்கம், இலங்கை முச்சக்கரவண்டி போக்குவரத்து சங்கம் மற்றும் ஏனைய போக்குவரத்து சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

## சப்புக்கஸ்கந்த நிலையம்... 03ஆம் பக்கத் தொடர்

இந்நிலையில், அங்குள்ள கொதிகலன்களின் ஏற்பட்ட கோளாறு காரணமாக வேலைகளை ஆரம்பிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் கூறுகையில்,

"இரண்டு கொதிகலன்களும் செயற்படுத்தப்பட்ட போதிலும் எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்திற்குப் பொறுப்பான சில அதிகாரிகளின் அறியாமை காரணமாக அதனை முறையாக இயக்க முடியாமல் போயுள்ளது.

சபுகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தில் நீண்டகாலமாக ஈரானின் லைட் மற்றும் மார்பன் வகை கச்சா எண்ணெய்யே இறக்குமதி செய்யப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு வந்தது.

எனினும் தற்போது ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய் மாத்திரமே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த கச்சா எண்ணெயிலிருந்து மிகவும் குறைந்தளவில் மாத்திரமே பெற்றோல் மற்றும் டீசல் பெற முடியும்.

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் 90,000 டொன் கச்சா எண்ணெய் சுத்திகரிக்கப்பட்டு கிடைக்கபெறும் 51 சதவீதமான எண்ணெயிலிருந்து 17 சதவீதமானவை மாத்திரமே பெற்றோல் மற்றும் டீசல் ஆகும். ஏனையவை தார் ஆகும்.

எவ்வாறாயினும் அடுத்த கச்சா எண்ணெய்யை இறக்குமதி செய்வது தொடர்பில் இதுவரை எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை" என்றார்.

## மண்சரிவு மற்றும்... 03ஆம் பக்கத் தொடர்

இதேவேளை, அத்தனகல ஓயா, ஜின் கங்கை நில்வளா கங்கை ஆகியவற்றின் நீர்மட்டம் அதிகரித்து வருவதால் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் காணப்படுவதால் குறித்த ஆறுகளை அண்டிய தாழ்நிலப் பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் அவதானமாக இருக்குமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அத்துடன் கொழும்பு, களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி, கண்டி, நுவரெலியா, மாத்தறை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்ட ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

## மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில்...

அதன்பின்னர் குறித்த சடலம் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த பெண் நீரில் அடித்து இழுத்துச் செல்லப்பட்டாரா அல்லது கொலையா அல்லது வேறு ஏதேனும் காரணங்களா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். மீட்கப்பட்ட சடலம் இதுவரை யாருடையது என அடையாளம் காணப்படவில்லை. இதனை தொடர்ந்து, சடலம் வைத்திய பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## நாளை ஜுன் 02 முதல்...

அது தொடர்பில் மேற்படி ஆணைக்குழுவின் தலைவர் ஜானக்க ரத்நாயக்க தெரிவிக்கையில்:

நாளை 2ஆம் திகதி முதல் எதிர்வரும் 5ஆம் திகதி வரை மீண்டும் மின் துண்டிப்பு இடம்பெறும் என்றும் தெரிவித்துள்ளார். அதற்கிணங்க 2 மற்றும் 3ஆம் திகதிகளில் இரண்டு மணித்தியால மின்துண்டிப்பும் 4ஆம் திகதி ஒரு மணித்தியால மின் துண்டிப்பும் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாகவும் 5ஆம் திகதி மின் துண்டிப்பு அமுல்படுத்தப்பட மாட்டாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 ஜூன் 1
புதன்கிழமை

# அட்டுளுகம ஆயிஷாவுக்கு நீதி கோரி முல்லைத்தீவில் கவனயீர்ப்பு போராட்டம்

மாங்குளம் குருப் நிருபர்



சிறுமி ஆயிஷாவுக்கு நீதி கோரியும் சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைக்கு எதிராகவும் முல்லைத்தீவில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று காலை முன்னெடுக்கப்பட்டது

வடக்கு கிழக்கு பெண்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் காலை 10.மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது

இதன்போது சிறுமி பாத்திமா ஆயிஷாவின் மரணம் தொடர்பாக நியாயமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்களினால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக ஒன்று திரண்ட சிறுவர்கள் பெண்கள், ஆண்கள் உள்ளிட்டவர்கள் தங்கள் கவனயீர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

'நீதி வேண்டும் நீதி வேண்டும்'. 'சிறுவர்களை வாழவிடு' போன்ற கோசங்களை எழுப்பியவாறு கவனயீர்ப்பினை முன்னெடுத்தனர்.

சிறுமிக்கு நடந்த கொடுமை பாராதூரமானது இலங்கையில் சிறுவர்கள் மீதான வன்முறை அதிகரித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் தொடர்பான குழு தெரிவித்துள்ளது.

# யாழ். மாவட்டத்திற்கு ஒரு வருடத்துக்கு 360 மெட்ரிக் தொன் மஞ்சள் தேவை

## மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர்

கோப்பாய் குறூப் நிருபர்

யாழ். மாவட்டத்தில் தனி நபர் ஒருவருக்கு ஒரு வருட நுகர்வுக்காக 600 கிராம் மஞ்சள் தேவைப்படுகின்ற நிலையில் யாழ்.மாவட்டத்தில் 360 மெட்ரிக் தொன் மஞ்சள் ஒரு வருடத்திற்கு தேவைப்படுவதாக வட மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் அஞ்சலாதேவி ஸ்ரீரங்கன் தெரிவித்தார்.

திருநெல்வேலியில் அமைந்துள்ள வட மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் பணிமனை வளாகத்தில் இடம்பெற்ற வயல் விழாவும் மஞ்சள் அறுவடை நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,..

யாழ். மாவட்டத்தில் இயற்கைப் பசளையைப் பயன்படுத்தி மஞ்சள் செய்கையை மேற்கொண்டுள்ளோம்.

9 மாதங்கள் செய்கை பண்ணப்பட்ட மஞ்சளை தற்போது அறுவடை செய்துள்ள நிலையில் மூன்று விதமான படிமுறைகளில் மஞ்சளைப் பதப்படுத்துகிறோம்.


5 கிலோ பச்சை மஞ்சளில் ஒரு கிலோ மஞ்சள் தூளை பெறமுடியும்.

அதேநேரம் 5 கிலோ பச்சை மஞ்சளில் 4 கிலோ மஞ்சளைப் பெற முடியும்.

அரசாங்கம் மஞ்சள் உற்பத்தியில் ஈடுபடுமாறு விவசாயிகளை அறிவுறுத்திய நிலையில் அதற்கான மஞ்சள் விதைகள் மற்றும் செயல்முறை விளக்கங்களை விவசாயப் பணிமனை ஊடாக மேற்கொண்டு வருகிறோம்.ஆகவே மேலும் எதிர்காலத்தில் மஞ்சள் பயிர் செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு விவசாயப் பணிமனையினால் திட்டங்கள் வகுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்

# வவுனியாவில் சண்டையிட்ட இரு யானைகள்; மக்கள் அச்சத்தில்

ஓமந்தை விஷேட நிருபர்



வவுனியா, மகா கச்சக்கொடிய கிராமத்திற்கு அருகில் இரண்டு காட்டு யானைகள் சண்டையிட்டு கொண்ட சம்பவம் கிராம மக்களை அச்சத்திற்குள்ளாக்கியிருக்கின்றது.

வனவிலங்கு அதிகாரிகள் இவ்விடயம் தொடர்பில் தெரிவிக்கையில்,

இரண்டு யானைகளும் தங்கள் பகுதியில் அதிகாரத்தை பெறுவதற்காகவே சண்டையிட்டு கொண்டதாக தெரிவித்தனர்.இரண்டு யானைகளும் சுமார் இரண்டு நாட்களாக குறித்த பகுதியில் இருந்ததாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.இச் சம்பவத்தை பார்வையிட அதிகளவான மக்கள் அப்பகுதியில் குழுமியிருந்ததனை அவதானிக்க கூடியதாக இருந்தது.

# வவுனியாவில் ஒரு எரிபொருள் நிலையத்தில் மாத்திரமே டீசல் விநியோகம்

ஓமந்தை விஷேட நிருபர்



வவுனியாவிலுள்ள ஒரு எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் மாத்திரமே டீசல் பெற்றுக்கொள்ளகூடிய நிலை காணப்படுவதனால் வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பதனை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.வவுனியா மன்னார் சந்தியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திலேயே டீசல் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.இந்நிலையில் நேற்று மாலையில் இருந்து வாகனங்கள் வரிசையில் காத்திருந்து டீசலை பெற்று வருகின்றன.

## உலக புகையிலை எதிர்ப்பு தினம்;

# முசலியில் இடம்பெற்ற விழிப்புணர்வு நடைபவனி

மன்னார் குறூப் நிருபர்




உலக புகையிலை எதிர்ப்பு தினமான நேற்று (31) முசலி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் விழிப்புணர்வு நடைபவனி இடம்பெற்றது.

முசலி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம். ஒஸ்மன் சாள்ஸ் தலைமையில் இடம்பெற்ற விழிப்புணர்வு நடைபவனியில் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன், சிலாவத்துறை வைத்தியசாலை வைத்தியர் உட்பட்ட ஊழியர்கள்,பிரதேச சபை, பிரதேச செயலக ஊழியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் ஆரம்பம்

மாங்குளம் குறூப் நிருபர்

முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்று சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த உட்சவம் நேற்று முன்தினம் அதிகாலை



பாக்குத்தெண்டலுடன் ஆரம்பமாகியது



நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தாக்கம் காரணமாக இரண்டு வருடங்கள் பக்தர்கள் ஆலயத்துக்கு வருகின்ற நிகழ்வானது தடை செய்யப்பட்டு ஆலய நிவர்வாகத்தினர் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஆலய சம்பிரதாய கிரியைகளை நடாத்த அனுமதி வழங்கப்பட்டிருந்த நிலையில் இம்முறை கட்டுப்பாடுகள் அற்ற நிலையில் ஆலய கிரியைகள் சிறப்புற ஆரம்பமாகியுள்ளது.

அந்தவகையில் வரலாற்று சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த உட்சவத்தின் ஆரம்ப நிகழ்வாக பாக்குத் தெண்டல் உற்சவம் இடம்பெற்றது.

முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்தில் நேற்று முன்தினம் அதிகாலை 2 மணிக்கு இடம்பெற்ற வழிபாடுகளை தொடர்ந்து வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவிலுடன் நீண்ட தொடர்பை பேணி வந்த குடியானவர்களுக்கு மரவு வழியாக அறிவிப்பதற்காக அவர்களது வீடுகளுக்கு சென்று பாக்குத்தெண்டல் இடம்பெற்றது

# காரில் பயணித்த இருவர் மரணத்தில் மர்மம்; மன்னாரில் சம்பவம்

தலைமன்னார் விஷேட நிருபர்

மன்னார் பேசாலை பகுதியிலிருந்து கொழும்புக்கு வாகனம் ஒன்றில் பயணித்த இருவர் மரணித்த நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் சடலங்கள் பிரேத பரிசோதனைக்கு வைக்கப்பட்டுள்ளன. மர்மமான இந்த மரணத்துக்கான காரணத்தை கண்டு பிடிப்பதில் பொலிசார் தீவிர விசாரனையில் ஈடுபட்டு வருகின்றனர்.மர்மமான மரணம் தொடர்பான ஆரம்ப விசாரனை மூலம் தெரிய வருவதாவது

30 ஆம் திகதி இரவு மன்னார் பகுதியிலுள்ள பேசாலை பகுதியிலிருந்து தங்கள் சொந்த வாகனத்தில் சாரதி உட்பட நான்கு நபர்கள் கொழும்புக்கு புறப்பட்டுச் சென்றதாகவும்

இவர்கள் கொழும்புக்கு செல்வதற்கு முன் இப் பகுதியிலுள்ள ஒரு விருந்தினர் விடுதியில் ஒன்று சேர்ந்து விருந்து உண்டபின் வீட்டுக்குச் சென்று இரவு 11 மணியளவில் கொழும்புக்கு புறப்பட்டுச் சென்றதாகவும்

இவர்கள் கொழும்புக்கு செல்லுகின்றபோது மன்னார் உயிலங்குளம் இடத்தை நெறுங்கியபோது காரில் பயணம் செய்த நான்கு பேரில் இருவர் காருக்குள்ளேயே மரணத்தை தழுவிக் கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது

மரணித்த இருவரும் பிரயாணம் செய்து கொண்டிருந்தபொழுது தாங்கள் கொண்டு வந்த போத்தல் ஒன்றிலிருந்த பாணத்தை அருந்திக் கொண்டு வந்ததாகவும் ஆரம்ப விசாரணை மூலம் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களின் நிலையை கண்ட சாரதி உடன் மீண்டும் வாகனத்தை மன்னாருக்கு திருப்பி மன்னார் பொது வைத்தியசாலைக்கு வந்துள்ளதாகவும் அப்பொழுது இருவரும் இறந்த நிலையில் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இறந்தவர்கள் பேசாலை காட்டாஸ்பத்திரியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான எம்.மசூத் (வயது 35) மற்றையவர் பேசாலையைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தை மகேந்திரன் பிரதீப் (வயது 26) ஆகியோரே இறந்தவர்களாவர்.

இவர்களின் சடலங்கள் மன்னார் வைத்தியசாலையிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக எடுத்துச் செல்ல இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் மரணம் தொடர்பாக இவர்களுடன் பயணித்த சாரதி உட்பட இருவர் பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் இறந்தவர்கள் தங்களுடன் எடுத்து வந்து அருந்திய பானம் தொடர்பாக சந்தேகம் நிலவியுள்ளதாகவும் ஆரம்ப விசாரணையில் தெரிய வந்துள்ளதுடன் இதில் பொலிசார் தீவிர கவனம் செலுத்தியுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் 120 பேருக்கு மேல் இறப்பு; நீதி கிட்டுமா?

மாங்குளம் குறூப் நிருபர்



இதுவரை போராடியவர்களில் 120 பேருக்கு மேல் இறப்பு,எமக்கு நீதி கிட்டுமா? என்ற ஏக்கத்தோடு முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் நேற்று முன்தினம் (30) கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கபட்டுள்ளது .

முல்லைத்தீவில் தொடரும் தொடர் போராட்டத்தின் 1906வது நாளான நேற்று முன்தினம் இந்த கவனயீர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டுப் பொறிமுறைகள் மீது நம்பிக்கை இல்லை, சர்வதேச பொறுப்புக் கூறலையும் நீதியையும் மட்டுமே நாங்கள் கோருகின்றோம் என்ற கோரிக்கையை முன்னிறுத்தி இந்த கவனயீர்ப்பு போராட்டம் முல்லைத்தீவு மாவட்ட செயலக முன்றலில் முன்னெடுக்கப்பட்டுள்ளது .

'எமக்கு வேண்டும் சர்வதேச நீதி விசாரணை' உள்ளிட்ட வாசகங்கள் எழுதிய பதாகையை தங்கியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.போராட்டம் இடம்பெற்ற பகுதியில் பல புலனாய்வாளர்கள் பிரசன்னமாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# வடக்கில் தமிழக உதவிகள் பகிர்ந்தளிக்கப்படுவதில் அநீதி

புதுக்குடியிருப்பு விசேட நிருபர்



தமிழக மக்கள் மற்றும் தமிழக முதல்வர் ஸ்டாலினால் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட நிவாரணப் பொதிகள் பகிர்ந்தளிப்பதில் போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட வடக்கு மாவட்டங்களாகிய முல்லைத்தீவு, வவுனியா,மன்னார் மாவட்டங்களுக்கு வழமைபோன்று அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் லக்ஷயன் முத்துக்குமாரசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள் தமது வாழ்வாதாரமாக விவசாயம், மீன்பிடித்தொழில்களைக் கொண்ட மாவட்டம். உரத்தட்டுப்பாட்டினாலும் எரிபொருள் தட்டுப்பாட்டினாலும் பாதிக்கப்பட்டு பொருளாதார ரீதியிலான நெருக்கு வாரங்களைச் சந்திக்கும் எமது மாவட்டங்களை சேர்ந்த மக்களுக்கு வழமையான புறக்கணிப்பினை இந்த அரசு செய்திருப்பது கண்டிக்கத்தக்கது.

இலங்கையில் அதிக பெண் தலைமைத்துவ குடும்பங்களையும் அங்கவீனமுற்றவர்களையும் கொண்ட முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு உடனடியாக அதிக நிவாரணப் பொதிகளை அவதியுறும் மக்களுக்கு வழங்க முன்வர வேண்டுமென கேட்டுக் கொள்கின்றோம்.

## வவுனியாவில் ஊடகவியலாளர்

# ஐயாத்துரை நடேசனின் 18ஆவது நினைவு தினம்

வவுனியா விசேட நிருபர்




வவுனியாவில் ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 18 ஆவது நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா ஊடக அமையத்தில் நேற்று (31) இந் நிகழ்வு இடம்பெற்றது.

ஊடகவியலாளர் பணி நிமித்தம் சென்ற போது மட்டக்களப்பில் கடந்த 2004 ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி ஆயுததாரிகளால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

ஊடக அமையத்தின் தலைவர் பரமேஸ்வரன் கார்த்திபன் தலைமையில் இடம்பெற்ற இவ் நிகழ்வு ஒரு நிமிட அக வணக்கத்துடன், ஆரம்பமாகி ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் திருவுருவ படத்திற்கு மலர் வணக்கம் செலுத்தப்பட்டதுடன் தொடர்ந்து மெழுகுதிரி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்கள் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

# இலங்கை மாணவர்களுக்கு எகிப்து பல்கலைக்கழகங்களில் கல்வி

## எகிப்பு உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு





**மாவத்தகம தினகரன் நிருபர்**

இலங்கைக்கான எகிப்பு நாட்டு உயர்ஸ்தானிகர் மெகத் முஸ்லிஹ், கண்டி மாவட்ட பள்ளிவாசல்களின் சம்மேளனத்திற்கும் இடையில் விசேட சந்திப்பொன்று கண்டி கட்டுக்கலை ஜும்ஆப் பள்ளிவாசலில் அமைந்துள்ள சமூக நல்லிணக்க மையத்தில் நடைபெற்றது.

கண்டி மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் கே. ஆர். ஏ. சித்தீக் மற்றும் அதன் முக்கிய உறுப்பினர்கள்,கண்டி ஒராபி பாஷா நிலையத்தின் பணிப்பாளர் எஸ். சலீம்டீன், கண்டி மாவட்ட ஜம்மிய்யதுல் உலமா சபையின் தலைவர் மௌலவி எச். உமர்தீன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்

எகிப்து நாட்டுப் பல்கலைக்கழகங்களில் இலங்கை மாணவர்களுக்கு மேலும் புலமைப் பரிசில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என இதன் போது கண்டி மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனம் தூதுவரிடம் கோரிக்கை விடுத்தது.







இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் 24 ஆவது பேராளர் மாநாடு கொழும்பு 07 உள்ள மேல் மாகாண ஆழகியல் கலையரங்கில் இடம்பெற்றது. இதன்போது புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்ட நிசாந்த வண்ணியாராச்சி மற்றும் பொது செயலாளர் றொபட் பிரான்சீஸ் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட முக்கியஸ்தர்களையும் படங்களில் காணலாம். புதிதாக தெரிவு செய்யப்பட்டவர்கள், தலைவர் நிசாந்த வண்ணியராச்சி, பிரதித் தலைவர் தனுக்க விஜயகுணவர்தன, உப தலைவர்களான எஸ்.இளையராஜா, கே.ஏ.நிசாந்த, நிதிச் செயலாளர் எம்.சுதாகர், கவுன்சில் அங்கத்தவர்கள் எஸ்.எல்.சந்திரபால எஸ்.ஜோன், எஸ்.தமிழ்மாறன், சாமர பேமரத்ன, பிரசன்னா, மகேஸ் ரணசிங்க. படங்கள் நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்

# பொருளாதார நெருக்கடியிலிருந்து மக்களை மீட்கும் விசேட மனித நேய திட்டம்

## இராணுவத்தால் காரைதீவில் ஆரம்பம்




பொருளாதார நெருக்கடியில் இருந்து அம்பாறை மாவட்ட மக்களை மீட்டெடுக்கின்ற விசேட மனித நேய வேலைத் திட்டம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொண்டு அமைப்புகளின் பங்களிப்புடன் இராணுவத்தின் அம்பாறை மாவட்ட கட்டளை தலைமையகத்தால் முன்னெடுக்கப்படுகின்றது.

சிங்கப்பூர், இலங்கை ஆகிய நாடுகளை சேர்ந்த தொண்டு நிறுவனங்களின் 63.75 மில்லியன் ரூபாய் மனித நேய நிதியில் 42,500 குடும்பங்களை இலக்கு வைத்து எல்லைகளை கடந்த அன்பு என்கின்ற மகுடத்திலான வெசாக் பண்டிகை கால மனித நேய வேலை திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இதன் ஆரம்ப விழாவும், காரைதீவு பிரதேச மக்களுக்கான உலர் உணவு பொதிகள் கையளிப்பு வைபவமும் காரைதீவு பிரதேசத்துக்கான இராணுவ முகாம் பொறுப்பதிகாரி மேஜர் சமில் நிசானின் ஒழுங்கமைப்பில் மாவட்ட கட்டளை தளபதி உள்ளிட்ட இராணுவ உயரதிகாரிகள், சர்வ சமய தலைவர்கள் ஆகியோரின் பங்கேற்புடன் காரைதீவு விபுலானந்தா கலாசார மண்டபத்தில் அண்மையில் இடம் பெற்றன.


திகதி 30.05.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4771
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,613,750.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,254,942.00
ஆங்கில எழுத்து H வெற்றி இலக்கங்கள் 5 1 4 2 0 7

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0080
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,851,720.00
இலக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 10 25 56 59
விசேட இலக்கினம் கும்பம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,645,075.60

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம்: 801
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,288,500.00
வெற்றி இலக்கினம் X
வெற்றி இலக்கங்கள் 06 31 63 74
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 112,317,229.60

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3013
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,498,380.00
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 23 36 39 60
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 65,819,034.96

கோடி 25 + Mega Power மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1119
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,248,800.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 253,765,310.00
K 18 13 16 53 64
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011-4607001-2 Email: info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web: www.nlb.lk



## இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 21 (2) பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்.

**விலக்களித்தலுக்கான உத்தேசம் (வகை விலக்கு)**

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 21 (2) பிரிவிற்கமைய இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவானது இத்தால் அறியச் செய்வது யாதெனில், குறித்துரைக்கப்பட்ட/ முறையான வளாகங்களில் மட்டும் மின்சாரத்தை விநியோகித்தல் மற்றும் வழங்கல் ஆகிய நோக்கங்களிற்காக, நுகர்வோருக்கு மின்சாரம் கிடைப்பதையும் தொடர்ச்சியையும் உறுதி செய்வதற்காக மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நோக்கத்திற்காக, நாடு முழுவதும் புவியியல் ரீதியாக விநியோகிக்கப்படும் அதிக எண்ணிக்கையிலான மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் சிறிய அளவிலான மின் உற்பத்தியின் தன்மையைக் கருத்தில் கொண்டு.ஆணைக்குழு கீழ்வரும் அடையாளங்காணப்பட்ட வகைகளுக்கு விலக்களிக்க உத்தேசித்து (மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான உரிமம் பெறுவதற்கான தேவையிலிருந்து விலக்கு) உள்ளது என்பதாகும்.

**தகவல்**

குறைந்த மின்னழுத்தம், 75kW, சூரியசக்தியில் இயங்கும் சூரியPV அமைப்புகளுக்கான வெற்றிகரமான திட்ட முன்மொழிவுகள் இலங்கை மின்சாரசபையினால் தனியுரிமை அடிப்படையில் கூரையில் நிறுவப்பட்டுள்ளன. மேற்கூறிய கொள்முதலின்கீழ் வெற்றிகரமான திட்டமுன்மொழிவுகளின் பட்டியல் பின்வரும் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.
https://www.pucsl.gov.lk/news-room/notices/

மேற்குறிப்பிட்ட முன்மொழிவுகள் தொடர்பான, ஆட்சேபனைகள் (ஏதுமிருப்பின்) அறிவித்தல் வெளியிடப்பட்டு இருபத்து எட்டு (28) நாட்களுக்குள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக அறிவிக்கலாம். அத்துடன் ஆட்சேபனைகளை முன்வைக்கும் போது விண்ணப்ப இலக்கத்தினைக் குறிப்பிட்டு முன்வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தலைவர்
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
06-வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இலக்கம் 28, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03

தொலைபேசி: (011) 2392607/8
தொலைநகல்: (011) 2392641
பெக்ஸ்: licensing@pucsl.gov.lk
இணையதளம்: www.pucsl.gov.lk

திகதி: 2022.06.01



விவசாய நவீனமயமாக்கல் திட்டம் Agriculture Modernization Project
THE WORLD BANK
கமத்தொழில் அமைச்சு Ministry of Agriculture

## இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு
## விவசாயத்துறை நவினமயமாக்கல் செயற்றிட்டம்

கமத்தொழில் அமைச்சு

IDA Credit No.: 5873 LK

## பெறுகை அறிவித்தல்

**Supply, Delivery, Installation & Commissioning of Low Pressure\ Mini Sprinkler Irrigation System and Drip Tape Irrigation Systems for Northern, Eastern, Central and Uva Provinces**

2022.05.08ஆம் திகதியன்று சிலுமின மற்றும் சண்டே ஒப்சேவர் புதினப்பத்திரிகைகளில் கீழே குறிப்பிட்டுள்ள அதிகாரம் பெற்றவர்களினால் பிரசுரிக்கப்பட்ட மேலேயுள்ள பெறுகை அறிவித்தல் தொடர்பானது.

நாட்டில் நிலவும் தற்போதுள்ள சூழ்நிலையை கருத்திற் கொண்டு, பெறுகை அறிவித்தலானது பின்வருமாறு மீளமைக்கப்பட்டுள்ளது.

1. கேள்வி ஆவணங்களை வழங்கும் காலமானது 2022 ஜுன் 10ஆம் திகதி வரையும் நீடிக்கப்பட்டுள்ளதுடன் விலைமனுக்கள் திறத்தல் 2022 ஜுன் 10ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு விலைமனுக்களை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.
2. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 0777419521 என்ற இலக்கமுடைய தொலைபேசியின் வழியாக கமத்தொழில் அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம், பெறுகைத் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
4. மேலேயுள்ள குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு

**தலைவர்,**
**பெயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 123/2, பன்னிப்பிட்டிய பாதை, பத்தரமுல்ல.**
**தொலைபேசி: 011 2696086 அல்லது 0777419521**

திகதி: 01.06.2022



## எல் பீ .ஃபினான்ஸ் பி.எல்.சி பகிரங்க ஏலவிற்பனை

எல் பீ .ஃபினான்ஸ் பி.எல்.சி நிறுவனத்தில் அடகு வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் திகதி | | முகவரி |
|---|---|---|
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 755/1, பன்னிபிட்டிய வீதி, பத்தரமுல்ல. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 91, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 92, ஸ்டான்லி திலகரட்ன மாவத்தை, நுகேகொடை. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 434, ஈ.டபிள்யு.பெரேரா மாவத்தை, கோட்டே வீதி, பிட்டகோட்டே. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 595, ஹைலெவல் வீதி, கங்கொடவில, நுகேகொடை. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 61/2, கண்டி வீதி, திஹாரிய. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 594/3, கண்டி வீதி, நிட்டம்புவ. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 19, பிரதான வீதி, கேகாலை. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 1B, பௌத்தாலோக மாவத்தை, கம்பஹா. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 81, கண்டி வீதி, வரகாபொல. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 282, அநகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 13, ஸ்டேசன் வீதி, மாத்தறை. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 66, திஸ்ஸ வீதி, தங்காலை. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 138 D/1, அம்பாந்தோட்டை வீதி, அம்பலாந்தோட்டை. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 83, தெனியாய வீதி, அக்குரெஸ்ஸ. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 2, எச்.வி.கட்டிடம், தெல்லாவ வீதி, நெலுவ. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 149, பிரதான வீதி, தெனியாய. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 65/A, ஸ்ரீ சத்தர்ம மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு 10. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 282, நாகலாகம் வீதி, கொழும்பு 14. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 52/17, கொதட்டுவ புதிய நகரம், கொதட்டுவ. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 21, புனித ஜோசப் வீதி, கொழும்பு 14. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 371/1, டாம் வீதி, கொழும்பு 12. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 551, தெமட்டகொட வீதி, கொழும்பு 09. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 66, ஜம்பட்டா வீதி, கொழும்பு 13. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 197, செட்டியார் தெரு, கொழும்பு 11. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 256, புதிய நகரம், தம்புத்தேகம. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | ரஜரட்ட கட்டிடம், பிரதான வீதி, கதுருவெல, பொலன்நறுவை. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 137, பிரதான வீதி, அனுராதபுரம். |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 514/A, புதிய நகரம், அனுராதபுரம். |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 26, கண்டி வீதி, மதவாச்சி. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 38, குருநாகல் சந்தி, தம்புளை. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | பிரதான வீதி, மெதிரிகிரிய. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 15, தலாவ வீதி, கெக்கிராவ. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 24, சிலாபம் வீதி, ஆனமடுவ. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 96, அகலவத்த வீதி, மத்துகம. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 87, பிரதான வீதி, பிட்டிகல. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 14, பிரதான வீதி, எல்பிட்டிய. |
| 01/04/11/18 | ஜூலை 2022 | இல. 48, இரத்தினபுரி வீதி, பதுரலிய. |
| 02/05/12/19 | ஜூலை 2022 | இல. 134, பிரதான வீதி, வென்னப்புவ. |
| 02/05/12/19 | ஜூலை 2022 | இல. 106C, குருநாகல் வீதி, புத்தளம். |
| 02/05/12/19 | ஜூலை 2022 | இல. 84, பிரதான வீதி கல்பிட்டிய. |
| 02/05/12/19 | ஜூலை 2022 | இல. 356, பிரதான வீதி, நீர்கொழும்பு. |
| 02/05/12/19 | ஜூலை 2022 | இல. 40A, கொழும்பு வீதி, சிலாபம். |
| 02/05/12/19 | ஜூலை 2022 | இல. 110, சிலாபம் வீதி, கொச்சிகடை. |
| 02/05/12/19 | ஜூலை 2022 | இல. 57, வெயாங்கொட வீதி, மினுவாங்கொட. |
| 02/05/12/19 | ஜூலை 2022 | இல. 229/1, கடவத்த வீதி, கனேமுல்ல. |
| 02/05/12/19 | ஜூலை 2022 | இல. 69, கிரஉல்ல வீதி, திவுலபிட்டிய. |
| 02/05/12/19 | ஜூலை 2022 | இல. 107, சென் ஜோசப் வீதி, நீர்கொழும்பு. |
| 02/05/12/19 | ஜூலை 2022 | இல. 75A, சிலாபம் வீதி, மாரவில. |
| 02/05/12/19 | ஜூலை 2022 | இல. 434, பேஸ்லைன வீதி, அவரிவத்த, கட்டுநாயக்க. |
| 02/05/12/19 | ஜூலை 2022 | இல. 661/A, தேவத்த வீதி, ராகம. |
| 02/05/12/19 | ஜூலை 2022 | இல. 6/1/1, பழைய நீர்கொழும்பு வீதி, ஜா-எல. |
xxxii. துப்புரவேற்பாட்டு வேலைகள் தொடர்பான சேவைகள் வழங்குதல் (அலுவலக சுத்திகரிப்பு / மலசலகூடங்கள் / அலுவலக சுற்றுப்புறங்களை சுத்தம் செய்தல் மற்றும் வேறு எந்த வகையான சுத்திகரிப்பு வேலைகள்)

xxxiii. பாதுகாப்பு சேவைகள் வழங்குதல்

02. **விண்ணப்பிக்க வேண்டிய முறை:** மாதிரி விண்ணப்பப் படிவங்களை www.ayurvediccorp.gov.lk, www.ayurveda.gov.lk மற்றும் www.health.gov.lk எனும் இணைய தளங்களிலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம் என்பதுடன் அல்லது அந்த மாதிரிப் படிவத்தின் பிரகாரம் உங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அல்லது நாவின்ன, தலைமை அலுவலகத்திற்கு வருகை தந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2022-06-30ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக ‘தலைவர், இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம், இல. 94, பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மஹரகம’ என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரடியாக் கொண்டு வந்து ஒப்படைக்கலாம்.

**விசேடம்:**

2023ஆம் வருடத்தின் பொருட்டு நீங்கள் / உங்களது நிறுவனம் இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தில் பதிவு செய்து கொள்வதானால் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு அல்லது காசுக் கட்டளையுடன் நிர்ணயிக்கப்பட்ட தினத்திற்கு அதாவது 2022-06-30ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கூட்டுத்தாபனத்திற்குக் கொண்டு வந்து ஒப்படைக்கவும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் கூட்டுத்தாபனத்தினால் நிராகரிக்கப்படும். நீங்கள் / உங்களது நிறுவனம் விண்ணப்பப் படிவத்தை பதிவுத் தபாலில் அனுப்புவதானால் நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் தொற்று நிலைமை, பொருளாதார நெருக்கடி நிலைமையினால் நாட்டில் நிலவும் குழப்ப நிலைமை மற்றும் தபால் சேவைகளில் ஏற்படும் தாமதம் காரணமாக நீங்கள் / உங்களது நிறுவனத்தின் விண்ணப்பப் படிவங்கள் தாமதமாகக் கிடைக்கும் என்பதுடன் அவைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. (2022-06-30ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள்) தபாலில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்த்துக் கொள்வதற்கு உங்களது விண்ணப்பப் படிவத்தை ஏற்றுக்கொள்ளப்படும் தினத்திற்கு முன் இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்திற்கு நேரில் கொண்டு வந்து ஒப்படைக்குமாறு தயவுடன் அறிவிக்கப்படுகின்றது.

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ‘‘வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2023’’ எனவும் மற்றும் விண்ணப்பிக்கும் பொருள், சேவை மற்றும் வேலை வகுதி என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும்.

03. **பதிவுக்கான கட்டணம்:** ஒரு வழங்கல் வகுதிக்கான பதிவுக் கட்டணம் 1000.00 ரூபாவாகும் உதா: உலர்ந்த மருந்திற்கான பதிவு 1000.00 ரூபாவாகும். எண்ணெய் வகைகளுக்கான பதிவு 1000.00 ரூபாவாகும் (அவ்வாறான 3 வகைகளுக்கான பதிவுக் கட்டணம் 3000.00 ரூபாவாகும்.)
இதன் பொருட்டு இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பெயரில் காசுக் கட்டளையொன்றை அனுப்புதல் வேண்டும். காசுக் கட்டளை செலுத்தும் அலுவலகம் மஹரகம தபால் நிலையமெனக் குறிப்பிடுதல் வேண்டும். இதற்குப் புறம்பாக கூட்டுத்தாபனத்தின் காசாளருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்தலாம். அரச நிறுவனங்களுக்கு பதிவுக் கட்டணம் விலக்களிப்புச் செய்யப்படும். விண்ணப்பத்துடன் வங்கிப் பிணை/ காசுக் கட்டளை/ காசாளரிற்கு பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டையும் இணைத்தனுப்புதல் வேண்டும். (பதிவு செய்யப்படுவதற்காக செலுத்தப்பட்ட பதிவுக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது)

04. வழங்குநர்களைப் பதிவு செய்தல்: உரிய தினத்தில் கிடைக்கப்பெறும் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுக்கட்டணம் செலுத்தப்பட்ட விண்ணப்பங்களைப் பரீட்சித்துப் பார்த்து, அவற்றில் தகுதியானவைகள் 2023ஆம் வருடத்தின் பொருட்டு இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் வழங்குநர்களாக பதிவு செய்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அவ்வாறு பதிவு செய்யப்படும் வழங்குநர்களுக்கு அது தொடர்பாக எழுத்து மூலம் அறிவிப்புச் செய்யப்படும்.

**இவ் அறிவித்தல் கீழ்க்காணும் இணையதளங்களில் வெளியிடப்பட்டுள்ளன.**

- இணையதளம் - **www.ayurvediccorp.gov.lk** - இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம்
- இணையதளம் - **www.health.gov.lk** - சுகாதார அமைச்சு
- இணையதளம் - **www.ayurveda.gov.lk** - ஆயுர்வேதத் திணைக்களம்

**மேலதிக விபரங்களுக்காக அழைக்கவும்:**

- **பொது முகாமையாளர் - 011-2844108**
- **வழங்கல் முகாமையாளர் - 011-2840162**
- **இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்களில்**
- **மின்னஞ்சல்** - chairmanayurveda@gmail.com/supply@ayurvediccorp.gov.lk
- **தொலைநகல் - 011-2844357**

**சட்டத்தரணி சாகலா அபேவிக்கிரம,**
**தலைவர்,**
**இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம்.**

# INVITATION FOR BIDS (IFB)

## PACHCHILLAIPALLI PRADESHIYA SABHA, KILLINOCHCHI DISTRICT

### LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT (LDSP)
### LOAN NUMBER : P 163305

01. The Democratic Socialist Republic of Sri Lanka has received a loan from the World Bank (WB) towards the cost of Local Development Support Project (LDSP), and intends to apply part of the proceeds of this loan to payments under the Contract for **Construction of Interlock Block Paving in front of Shopping Complex at Pallai and Construction of Open Market Shed at Pallai (PPTA, PT Continue Work).**

02. The Chairman,Local Authority Procurement Committee (LAPC) on behalf of the Pachillaipalli Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified Bidders for **Construction of Interlock Block Paving in front of Shopping Complex at Pallai and Construction of Open Market Shed at Pallai (PPTA, PT Continue Work)** as described below.

| No. | Contract No | Contract Name | Tentative Estimated Cost (Rs. Mn.) | Required Minimum CIDA Grade | Contract Period | Bid Validity Period | Bid Security Amount (Rs.) | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | NP/14/45(3)/ PL/PT/07/2021 | **Construction of interlock block paving in front of Shopping Complex at Pallai** | 0.9 | C9 or C8 | 60 Days | 17.08.2022 | 15,000.00 | 14.09.2022 |
| 02 | NP/14/45(3)/ PL/PT/02/2022 | **Construction of Open Market Shed at Pallai (PPTA, PT Continue Work)** | 0.9 | C9 or C8 | 60 Days | 17.08.2022 | 15,000.00 | 14.09.2022 |

03. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** procedure.

04. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty of **Building Construction** for grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).

05. Qualification requirements are indicated in Section 5 (Bidding Data and Contract Data) of the Bidding document.

06. Interested bidders may obtain further information from **Chairman, Pachillaipalli Pradeshiya Sabha, A9 Road, Pallai,** (T.P No: 0212050037, Fax No: 0212050036) and inspect the bidding documents at the address given below from **01st June 2022 until 28th June 2022** from **09:00 Hrs to 15:00 Hrs** on normal working days.

07. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Pachillaipalli Pradeshiya Sabha, A9 Road, Pallai from 01st June 2022 until 28th June 2022 from 09:00 Hrs to 15:00 Hrs** on normal working days upon payment of a non-refundable fee of **Two Thousand Rupees (Rs.2,000.00)**. The method of payment will be by cash**.**

08. Bids shall be delivered in duplicate to the address below at **Chairman, Local Authority Procurement Committee, Pachillaipalli Pradeshiya Sabha, A9 Road, Pallai** at or before **14.00 Hrs on 29th June 2022.** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

09. A pre-bid meeting will be held at 11.00 Hrs on **22nd June 2022 at Pachillaipalli Pradeshiya Sabha, A9 Road, Pallai.**

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC).**
**Pachchillaipalli Pradeshiya Sabha,**
**A9 Road, Pallai.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## இலங்கை போக்குவரத்துச் சபை (SLTB)

### அசோக்லேலண்ட் புதிய சிலின்டர் ஹெட்களை வழங்கி விநியோகிப்பதற்கான விலைமனு
### (SLTB/TS/GEN/02-III/2022)

1. தேசிய போட்டி கேள்விகோரல் முறைமையின் கீழ் 2022.06.21 மு.ப. 10.30 வரை தரப்பட்டுள்ள மாதிரிகளுக்கு அமைவாக 60 நாள், கடன் அடிப்படையில் அசோக்லேலண்ட் புதிய சிலின்டர் ஹெட்களை வழங்கி விநியோகிப்பதற்காக தகைமையான வழங்குநர்களிடமிருந்து, பொறியிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை போக்குவரத்து சபையின் சார்பாக இ.போ.ச பெறுகைக் குழுவின் தலைவர் பெற்றுக் கொள்வார். கொழும்பு - 05, கிருல வீதி, 200, இலங்கை போக்குவரத்துச் சபை, பெறுகைப் பிரிவு, செயலாளர் இடம் காணப்படும் படிவங்களில் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அலுவலக நேரங்களில் வேலை நாட்களில் ஓர் மீளளிக்கப்படாத விண்ணப்பப்படிவக் கட்டணம் ரூ. 35,000/- செலுத்துவதன் பேரில் 2022.06.01 முதல் 2022.06.21 வரை விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும்.

| விபரம் | விலைமனுப் பிணை (ரூபா) |
|---|---|
| 60 நாள் கடன் அடிப்படையில் அசோக்லேலன்ட் புதிய சிலின்டர் ஹெட்களை வழங்கி விநியோகித்தல் | 2,000,000.00 |

2. பஸ்களின் உதிரிப்பாக மொத்த பெயர் குறிப்பிடப்படும் உள்ளூர் பிரதிநிதிகள்/ உற்பத்தியாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் முகவர்கள் மாத்திரம் விலைமனுக்கோர தகைமை பெறுவர்.
3. உற்பத்தியாளர்களின் அதிகாரமில்லாத விலைமனுக்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.
4. (அ) விலைமனு சமர்ப்பிக்கப்படுவதற்கு முன் 1987ஆம் ஆண்டின் ஒப்பந்த இல 3 இன் விதிகளின் கீழ் கொழும்பு - 10, D.R விஜேவர்தன மாவத்த, 'சமாகம் மெதுர' பொது ஒப்பந்தங்கள் பதிவாளரின் கீழ் ஓர் விலைமனுதாரரின் சார்பாக அல்லது முகவராக செயற்படும் எந்த நபர், உதவி முகவர், பிரதிநிதித்துவப்படுத்துபவர் அல்லது பெயர் குறிப்பிடப்படுபவர். சான்றிதழின் மூலம் பிரதியை சமர்ப்பிக்க தவறும் விலைமனுதாரரின் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

   (ஆ) 1987ஆம் ஆண்டின் பொது ஒப்பந்த சட்டம் இல-03 விதிகளின் கீழ் பெறுகை வழங்கப்படுவதற்கு முன் மற்றும் விலைமனு சமர்ப்பித்த பின்னர் உடனடியாக தாமாகவே விலைமனுதாரர்களும் பதிவு செய்யப்படுவர் சம்பந்தப்பட்ட பெறுகைக் குழுவிற்கு பொது ஒப்பந்த சட்டத்தின் விதிகளின் கீழ் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்காத எந்த விலைமனுதாரருக்கும் பெறுகை வழங்கப்பட மாட்டாது.
5. விலைமனுக்கள் 2022.09.23ம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும் எனினும் ஒப்பந்த உடன்படிக்கை கையொப்பமிட்ட தினத்திலிருந்து ஆறு (06) மாத காலத்திற்கு விலைமனுக்கள் உறுதிப்படுத்தப்படும்.
6. இபோச வினால் முதல் எழுத்துமூல வேண்டுதலின் பேரில், மாற்றமுடியாத மற்றும் நிபந்தனையற்ற கோரப்படும் போது வழங்கக்கூடிய மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து வழங்கப்படும் மேலே குறிப்பிடும் பெறுமதிக்கு 2022.10.22 வரை செல்லுபடியாகும் ஒரு விலைமனுப்பிணையை விலைமனுவுடன் இணைத்தல் வேண்டும். மேலே குறிப்பிடுமாறு ஓர் செல்லுபடியாகும் விலைமனுப் பிணை இணைக்கப்படாத எந்த விலைமனுவும் நிராகரிக்கப்படும்.
7. விலைமனு ஆவணத்தின் எல்லாப் பக்கங்களும் விலைமனுதாரரால் கையொப்பமிடப்படுவதுடன் அவரது முத்திரை இடப்படல் வேண்டும்.
8. 2022.06.22 மு.ப. 10.30 அல்லது அதற்கு முன் கொழும்பு-05 கிருல வீதி 200, இலங்கை போக்குவரத்து சபை பெறுகை பிரிவில் இந்த நோக்கத்திற்காக குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் விலைமனுக்கள் வைப்பிலிடப்படல் வேண்டும். அல்லது நகல்களுடன் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் அசோக்லேலண்ட் புதிய சிலின்டர் ஹெட்களை வழங்கி விநியோகித்தலுக்கான விலைமனு' என்று குறிப்பிடப்பட்டு, பொறியிடப்பட்ட உறைகளில் இடப்படல் வேண்டும்.
9. விலைமனுக்கள் கொழும்பு-05, கிருல வீதி, 200, இலங்கைப் போக்குவரத்து சபை, பெறுகைப் பிரிவில் மூடப்பட்ட பின்பு உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனு திறக்கப்படும் போது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**இபோச பெறுகைக்குழு,**
**இலங்கை போக்குவரத்துச் சபை,**
**இல-200, கிருல வீதி, கொழும்பு-05**

விசாரணைகள், செயலாளர், பெறுகைக் குழு - இலங்கை போக்குவரத்து சபை
தொ.பே - 0112369041, 0117706115 மற்றும் 0117706110

நீர் வழங்கல் அமைச்சு

# தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

## விலைக்கோரல் அறிவித்தல்

பின்வரும் வேலைகள் / வழங்கல்கலுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான விலைமனு பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| **சிவில் கேள்விகள்** | | | | | | | |
| 01 | பூஜாப்பிட்டிய நீர் வழங்கல் திட்டத்திற்கு வருமானமற்ற நீரைக் குறைப்பதற்கான வாடகைச் சேவைகள் ஒப்பந்த இல: **RSC-C/CN/CIVIL/O&M/PUJAPITIYA/2022/40** | 6,000/- + %VAT | ரூபா 107,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C6 மற்றும் C7 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 7.1 மில்லியன் | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068 Fax: 081-2388027 கேள்வி முன்னோடிக் கூட்டம் 2022-06-09ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கட்டுகஸ்தோட்ட (மத்திய வடக்கு) முகாமையாளர் அலுவலகத்தில் இடம்பெறும். | 15/06/2022 பி.ப. 2.00 |
| 2022-03-30ஆம் திகதி பிரசுரமான விளம்பரம் தொடர்பானது. புபுரெஸ்ஸ அட்டபாகே நீர் வழங்கல் திட்டம் - புபுரெஸ்ஸ அட்டபாகே நீர் வழங்கல் திட்டத்தில் சேவை நீர்த்தேக்கத்தை நிர்மாணித்தல் - (Batch 01) ஒப்பந்த இல : **NWSDB/C/CP/A4-57/GOSL/2021/06 -** இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2022-08-10ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதைக் கவனத்திற் கொள்ளவும். | | | | | | | |
| 2022-03-09ஆம் திகதி பிரசுரமான விளம்பரம் தொடர்பானது. பரவாகும்புர நீர் வழங்கல் திட்டத்திலுள்ள நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியில் ஒரு நாளைக்கு 6000m³ கொள்ளளவுடைய நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியை நிர்மாணித்தல் (கட்டிடம் மற்றும் சிவில் பெரிய வேலை) ஒப்பந்த இல : **NWSDB/S/CP/A2-48/GOSL/2021/1 -** இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2022-06-21ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதைக் கவனத்திற் கொள்ளவும். | | | | | | | |
| 2021-12-15ஆம் திகதி பிரசுரமான விளம்பரம் தொடர்பானது. உடுகமயில் நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியை விஸ்தரித்தல் மற்றும் மூல நீர் பிரதானத்தை வழங்குதல் மற்றும் பதித்தல், உள்ளீர்ப்பு கிணறை நிர்மாணித்தல். ஒப்பந்த இல : **NWSDB/S/CP/A2-45/GOSL/2021/1 -** இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2022-06-30ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதைக் கவனத்திற் கொள்ளவும். | | | | | | | |
| **வழங்கல் கேள்விகள்** | | | | | | | |
| 02 | களனி - முகாமையாளர் அலுவலகத்திற்கு லைன் அச்சுப்பொறிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் ஒப்பந்த இல: **RSC(W/N)/SS/CIPC/LINE PRINTER/M(K)/2022/11R** | 4,000/- + VAT | ரூபா 45,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் | 3.0 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கனேமுல்ல வீதி, கடவத்தை. Tele: 0112922129 Fax: 0112922146 | 22/06/2022 மு.ப. 10.00 |
| 03 | கண்டி நகர கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு 48 எண்ணிக்கையான Wedeco Make UV விளக்குகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் ஒப்பந்த இல: **RSC-C/KCWWTP/O&M/SUP/2022/20** | 4,000/- + VAT | ரூபா 30,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் | 3.04 மில்லியன் | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068 Fax: 081-2388027 | 15/06/2022 பி.ப. 2.00 |
| **வாகனம் வாடகைக்கமர்த்துதல்** | | | | | | | |
| 04 | களனி பிராந்தியத்திற்கு பெக்கோ லோடர் ஒன்றை வாடகைக்கமர்த்துதல் ஒப்பந்த இல: **RSC(W/N)/SS/HIRING/KEL (O&M)/2022/33** | 6,000/- + VAT | ரூபா 6,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கனேமுல்ல வீதி, கடவத்தை. Tele: 0112922129 Fax: 0112922146 | 22/06/2022 மு.ப. 10.00 |
| 05 | கம்பஹா பிராந்தியத்திலுள்ள கட்டான நீர் வழங்கல் திட்டத்திற்கு வேன் ஒன்று மற்றும் க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல் ஒப்பந்த இல: **RSC(W/N)/SS/HIRING/GAM (O&M)/2022/35** | 2,000/- + VAT | ரூபா 5,000/- Per Vehicle | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கனேமுல்ல வீதி, கடவத்தை. Tele: 0112922129 Fax: 0112922146 | 22/06/2022 மு.ப. 10.00 |
| 06 | நகரங்களுக்கான துப்புரவேற்பாடு மற்றும் சுகாதார முன்முயற்சி **(SHIFT)** திட்டம் - கார் ஒன்றை வாடகைக்கமர்த்துதல் ஒப்பந்த இல: **SHIFT/VEH-HIRE/AFD/PMU/2022/03** | 2,000/- + VAT | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | தலைவர், செயற்றிட்ட பெறுகைக் குழு, நகரங்களுக்கான துப்புரவேற்பாடு மற்றும் சுகாதார முன்முயற்சி **(SHIFT)** திட்டம், இல. 38, சார்ள்ஸ் பிளேஸ், ராவத்தாவத்த, மொறட்டுவ. Tele:011-2642744 Fax:011-2645680 மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை இலங்கை வங்கியின் தெஹிவளைக் கிளையில் 0079867300எனும் நடைமுறைக் கணக்கிலக்கத்திற்கு செலுத்துதல் வேண்டும். பெயரை **"Tender Fees-PPC/2022-03"** எனக் குறிப்பிடுதல் வேண்டும். | 22/06/2022 பி.ப. 2.00 |
| 07 | சீனா இலங்கை ஆராய்ச்சி மானியத் திட்டம் - வாகனங்களை வாடகைக்கமர்த்துதல் ஒப்பந்த இல: **RSC-C/CSLRGP/HIRING/ CSLRGP/JRDC/2022/75** | 4,000/- + VAT | கார் (SEDAN) ரூபா 39,000/- வேன் ரூபா 35,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068 Fax: 081-2388027 | 15/06/2022 பி.ப. 2.00 |

தயவு செய்து PCA 3 படிவத்தைப் பெற்றுக்கொள்ள இணையதளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக கம்பனி பதிவாளருடன் பதிவு செய்து கொள்ளவும். ("**" எனக் குறியீடு இடப்பட்ட கேள்விகளுக்கு மட்டும்) பதிவு செய்து கொள்வதற்கு gmail பயன்படுத்த வேண்டுமென மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

முடிவுத் திகதிக்கு முதல் நாள் வரை சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பிலான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்திலேயே கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமுகம் தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

**தலைவர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.**

## கிழக்கின் குரல்

# புகைப்பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு ஊர்வலம்





**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

உலக புகைப்பொருள் எதிர்ப்பு தினத்தை நினைவு கூரும் வகையில், கல்முனை பிராந்தியத்திற்கான பிரதான நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் செவ்வாய்க்கிழமை (31) இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எம். எச். கே. சனூஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ எல் எம் றிபாஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

"புகைப் பொருள் பாவனை அற்ற தேசம்" எனும் தொனிப்பொருளில் அமையப்பெற்ற இந்த நிகழ்வின் போது, புகைத்தலை தடுக்கும் வகையிலான வாசகங்களை கொண்ட பதாகைகளை ஏந்திய வண்ணம் சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய அதிகாரிகள், தாதிய உத்தியோகத்தர்கள், துணை மருத்துவ சேவையாளர்கள் மற்றும் ஊழியர்கள் பொதுமக்கள் என பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர்.

இதன் போது சாய்ந்தமருதில் இருந்து மாளிகைக்காடு வரை விழிப்புணர்வு ஊர்வலமும் இடம் பெற்றது. இந் நிகழ்வுகளில், கல்முனை பிராந்திய பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எம் பி ஏ வாஜித், பிராந்திய தொற்றுநோய் தடுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம். ஐ. எம். இர்ஷாத், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் யூ. எல். நியாஸ் ஆகியோர்களும் கலந்து கொண்டனர்.



கல்முனை எரிபொருள் நிலையமொன்றில் நேற்று மண்ணெண்ணெய் விநியோகம் இடம்பெற்றது. மக்கள் நீண்ட கியூவரிசையில் மண்ணெண்ணெய் பெறுவதற்காக காத்திருப்பதை படத்தில் காணலாம். படம்; நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்

# பாலமுனை ஹிரா நகரில் டயர், ஓயில் தொழிற்சாலை

### சூழலுக்கு ஏற்படும் பாதிப்பு தொடர்பாக ஆராய்வு



**(திராய்கேணி நிருபர் )**

அட்டாளைச்சேனை பிரதேசத்தின் பாலமுனை ஹிரா நகர் கிராமத்தில் டயர், ஓயில் தொழிற்சாலை இயங்கி வருகின்றது. பாலமுனை ஹிரா நகரில் அமைக்கப்பட்டுள்ள டயர், ஓயில் தொழிற்சாலையால் மக்களுக்கும், சூழலுக்கும் பெரும் பாதிப்பு ஏற்படுவதாக, அப்பகுதி மக்கள் பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபைகளுக்கு முறைப்பாடு செய்து வருகின்றனர்.

இது விடயமாக பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் சாபிர் தலைமையில், பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் ஒன்றுகூடல் நிகழ்வொன்று அண்மையில் இடம் பெற்றது.

இதில் அம்பாறை மாவட்ட சுற்றுச்சூழல் அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் எஸ்.உதயராஜ் கலந்து கொண்டார்.

அங்கு கலந்து கொண்ட பொதுமக்கள் பிரதிநிதிகளும், திணைக்களத் தலைவர்களும் கருத்துக்களை முன் வைத்ததை தொடர்ந்து, தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அதற்கமைய எதிர்வரும் ஆறு மாதங்களுக்குள் மக்கள் பாதிக்கப்படாத வகையில் தொழிற்ச்சாலையை இயங்க வைப்பதற்கான தீர்மானம் எட்டப்பட்டது.

இதில் மத்திய சுற்றாடல் உத்தியோகத்தர் எம்.ஐ. இஷாக், அட்டளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இஸ்மாயில், உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல். உசைனுதீன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## மரவள்ளி நடுகை

**(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)**



நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் வகையில் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு அக்கரைப்பற்று பிரதேச செயலக சமுர்த்தி பிரிவினரால் மரவள்ளி கிழங்கு நடுகை அண்மையில், சமுர்த்தி காரியாலய வளாகத்தில் இடம்பெற்றது. இதில் சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர், சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 18வது நினைவு தினம் அனுஷ்டிப்பு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**


மட்டக்களப்பில் படுகொலை செய்யப்பட்ட சிரேஸ்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 18வது நினைவு தினம் செவ்வாய்க்கிழமை (31) மட்டக்களப்பில் அனுஷ்டிக்கப்பட்டது. மட்டக்களப்பு காந்திபூங்கா முன்பாகவுள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நினைவுத்தூபியில்

மட்டு. ஊடக அமையம், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், கிழக்கு மாகாண தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நினைவு தின நிகழ்வு நடைபெறவுள்ளது. படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்



நினைவுத் தூபியில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நடேசனின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு ஈகச்சுடர் மற்றும் மலரஞ்சலி செலுத்தப்பட்டு பிராத்தனையும் இடம்பெற்றது.

## நகர்வலம்



## யானை தாக்குதலில் கான்ஸ்டபிள் காயம்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

கடமை நிமித்தம் சென்று கொண்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபில் ஒருவர் யானையின் தாக்குதலுக்குள்ளாகி பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மொரகொட பொலிசார் தெரிவித்தனர்.

ஜினதாச என்ற (87718) பொலிஸ் கான்ஸ்டபிளே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடமை நிமித்தம் கடந்த (29) உப பொலிஸ் பரிசோதகர் உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் மஹாமீகஸ் வெவ சேனை பகுதிக்கு அருகாமையில் உள்ள மில்ல உள்பத்த பகுதியில் கடமையில் இருந்த நிலையில் பி.பகல் 2.30 மணியளவில் யானை தாக்கியதாக பொலிசார் தெரிவித்தனர். யானையின் தாக்குதலுக்கு உள்ளான பொலிஸ் கான்ஸ்டபில் ஹபரண வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக தம்புள்ள வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

# தென் மாகாணத்தில் 1739 பேர் டெங்கு நோயினால் பாதிப்பு

### அதிக நோயாளிகள் காலி மாவட்டத்தில்

**வெலிகம தினகரன் நிருபர்**

தென் மாகாணத்தில் இவ்வருட ஜனவரி (2022) முதல் மே மாதம் இறுதி வரையான ஐந்து மாதத்துக்குள் 1739 பேர் டெங்கு நோயாளர்களாக இனம் காணப்பட்டுள்ளதாக தொற்று நோய்ப்பிரிவு தெரிவிக்கின்றது.

இவர்களுள் அதிகமான நோயாளர்கள் காலி மாவட்டத்தில் 1010 பேர் இனம் காணப்பட்டுள்ளனர். மாத்தறை மாவட்டத்தில் 421 பேரும், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 308 பேரும் இனம் காணப்பட்டுள்ளனர்.




கடந்த வருடங்களை விட இவ் வருடம் கூடுதலானோர் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டுள்ளதாக தென் மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் ஷந்திம சிறிதுங்க தெரிவித்தார்.

மேற்படி மாகாணத்தில் உள்ள சகல சுகாதார பிரிவுகளிலும் டெங்கு நோய் பரவுவதைத் தடுக்கும் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அண்மைக்காலமாக இப்பகுதிகளில் மழை பெய்து வருவதால் எதிர்காலத்தில் டெங்கு நோய் பரவும் வேகம் அதிகரிக்கலாம். எனவே, பொதுமக்கள் அவதானமாக இருந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

மேலும் நீர் தேங்கி நிற்கும் இடங்களை அவ்வப்போது அகற்றி விடுமாறும், சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறும் சுகாதார அதிகாரிகள் கேட்டுக்கொள்கின்றனர்.

# பாகிஸ்தான் தூதுவராலயத்தினால் தையல் இயந்திரங்கள் அன்பளிப்பு



**ஏ.எஸ்.எம்.ஜாவித்**

இளம் மாதர் அமைப்பின் ஏற்பாட்டில் இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவராலயத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட தையல் இயந்திரங்கள் நேற்று (31) தூதரகத்தின் தூதுவர் உள்ளிட்டவர்களால் பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டன.

YWMAயினால் கணவர்மாரை இழந்த தெரிவு செய்யப்பட்ட 14 விதவைப் பெண்களுக்கு அவர்களின் சுய தொழில் மூலம் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பெறுமதியான தையல் இயந்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. தெமடகொட வை.எம்.எம்.ஏ தலைமைக் காரியாலயத்தில் அமைப்பின் தலைவி தேசமான்ய பவாஸா தாஹா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக தூதுவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் உமர் பாருக் பர்கி கலந்து கொண்டதுடன் அமைப்பின் திட்டப் பொறுப்பாளர் தேசமான்ய மர்ளியா சித்தீக், உட்பட முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

## சிறுபோக விவசாய நடவடிக்கைகள் ஆரம்பம்

**திறப்பனை தினகரன் நிருபர்**

இம்முறை சிறு போகத்தின் போது செய்கை பண்ணப்படவுள்ள வேளாண்மை நிலத்தின் நூற்றுக்கு 50 வீதமான நிலங்களில் விவசாய நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது. இதன் கீழ் இது வரையில் சுமார் 2,61,000 ஹெக்டயர் காணிகளில் விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இம்முறை சிறுபோகத்தின் போது செய்கை பண்ணப்படவுள்ள காணிகளில் சுமார் 01 இலட்சம் ஏக்கர் காணிகளில் நெற் செய்கைக்குரிய ஆரம்பகட்ட வேலைகள் இது வரையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில்;

## மீனவர்கள் கடலுக்குச் செல்வதில் பாரிய சிக்கல்

### எண்ணெய் பிரச்சினை பிரதான காரணமாம்

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

தற்பொழுது ஏற்பட்டுள்ள எண்ணெய் பிரச்சினையின் காரணமாக மீனவர்களுக்கு கடலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக ஹம்பாந்தோட்டை மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் இம்மாவட்டத்தில் பல்வேறு பிரதேசங்களிலும் மீனின் விலை என்றும் இல்லாதவாறு அதிகரித்துள்ளது.

சந்தையில் ஒரு கிலோ மீனின் விலை ஆயிரம் ரூபாவினையும் தாண்டி விற்கப்படுகிறது. கடந்த சில மாதங்களாக தங்களது படகுகளுக்கு தேவையான எண்ணெயினை பெறமுடியாமையினால் மீனவர்கள் கடலுக்குசெல்வதனை தவிர்த்துள்ளனர். இதோடு ஆழ் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்பவர்களும் பொருட்களின் விலைகள் அதிகரித்தள்ளதன் காரணமாக தங்களது செலவுகளும் பல மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளதினால் கடலுக்கு செல்வதனை தவிர்த்துள்ளனர். இதனால் மீனவக் குடும்பங்களும் பொதுமக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## 'கிரிஸ்டல்' விஞ்ஞான கல்லூரியில் விசேட கலந்துரையாடல்

**வெலிகம தினகரன் நிருபர்**

கடந்த 19 வருடங்களாக உயர்தர கணித விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கு வகுப்புக்களை நடத்திவரும் வெலிகம 'கிரிஸ்டல்' விஞ்ஞான கல்லூரி 2024 (A/L) க்கான வகுப்புக்களை தற்போது ஆரம்பிக்கவுள்ளது.

இதுவிடயமாக ஆலோசனைக் கூட்டமொன்று எதிர்வரும் 4ம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வெலிகம அறபா தேசிய பாடசாலையில் நடைபெறவுள்ளது. வகுப்புக்களில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் இவ் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியும்.

ரம்மியமான பாடசாலை சூழலில் தரமான உயர் கல்வி, சிறந்த மேலதிக வழிகாட்டல், பாதுகாப்பான சூழலில் மாணவிகளுக்கான விடுதி வசதி, அனுபவம் வாய்ந்த ஆசிரியர் குழாம் போன்ற வசதிகளுடன் வகுப்புக்கள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புத்தளம் சென் மேரிஸிற்கு இரு கணனிகள் அன்பளிப்பு

**புத்தளம் தினகரன் நிருபர்**



புத்தளம் சென்மேரிஸ் தமிழ் மகா வித்தியாலய மாணவர்களின் கணனி அறிவை மேம்படுத்தும் நோக்கில் இரு கணனிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன.

ஆசிரியரும், சமூக ஆர்வலருமான எஸ். ஆர். எம். முஹ்ஸி மேற்கொண்ட முயற்சியின் பலனாக இந்த கணினிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அதிபர் அருட்சகோதரி ஜெனட் ரோட்ரிகோவிடம் சமூக ஆர்வலர் எஸ்.ஆர்.எம்.முஹ்ஸி மற்றும் புத்தளம் மாவட்ட சர்வமத அமையத்தின் இணைத் தலைவர் சிவஸ்ரீ வெங்கட சுந்தாராம குருக்கள் ஆகியோர் இணைந்து இவைகளை உத்தியோகபூர்வமாக அன்பளிப்பு செய்தனர்.

# உதைபந்தாட்ட போட்டியில் மன்னார் அணி சம்பியன்

**மன்னார் குறூப் நிருபர்**

மறைந்த மன்னார் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் முதலாம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு மன்னார் மாவட்ட சிரேஷ்ட உதைபந்தாட்ட சம்மேளனம் நடாத்திய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் மன்னார் விளையாட்டு கழகம் 2–0 என்ற கோல் அடிப்படையில் யாழ்ப்பாணம் விளையாட்டு கழகத்தை வெற்றியீட்டியுள்ளது.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த சுற்றுபோட்டியானது கடந்த சனிக்கிழமை காலை சனிக்கிழமை (28) ஆரம்பமாகி கடந்த ஞாயிற்றுக்கிழமை (29) மாலை இறுதி சுற்றுடன் நிறைவடைந்தது.

வட மாகாண ரீதியாக 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இடையே நடைபெற்ற இப்போட்டியில் வட மாகாணத்தில் இருந்து 10 கழகங்கள் போட்டிகளில் கலந்து கொண்டனர்.

இறுதி நாள் (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்ற இவ் சுற்றும் போட்டியானது மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் மாலை 5 மணியளவில் நடைபெற்ற போது இறுதி போட்டியில் மன்னார் மாவட்ட 'A' அணியினருக்கும் யாழ் மாவட்ட விளையாட்டு கழகத்தினருக்கும் இடையே நடைபெற்ற போது மன்னார் கழகம் 2–0 கோல்களால் யாழ் கழகத்தை வெற்றி பெற்றது.

இதில் மூன்றாவது இடத்தை மன்னார் மாவட்ட 'B' கழகம் வெற்றியீட்டிருந்தது.



இவ் விளையாட்டில் வெற்றியீட்டிய கழகங்கள் மூன்றுக்கும் முதலாவது வெற்றியீட்டிய கழகத்துக்கு வெற்றி கேடயமும் ஒரு லட்சம் ரூபா பணமும்,இரண்டாவது இடத்தை பெற்ற கழகத்துக்கு வெற்றி கேடயமும் 50 ஆயிரம் ரூபா பணமும்,மூன்றாவது இடத்தை பெற்ற கழகத்துக்கு வெற்றி கேடயமும் 25 ஆயிரம் ரூபா பணமும் வழங்கப்பட்டது.

இவ் நிகழ்வில் பிரதம அதிதியாக மன்னார் மறை மாவட்ட குருமுதல்வர் பி.கிறிஸ்து நாயகம் அடிகளார்,கௌரவ விருந்தினராக மன்னார் அரச அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல், மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரும் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன உப தலைவருமான எஸ். டுல்சன் நாகவத்த,விருந்தினர்களாக கொழும்பு சொர்க்கோ மாஸ்ரர் அசோசியேஷன் உப தலைவர் டெஸ்மன் ஜோசப் ,இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன உப பொருளாளர் ஏ.நாகராஜன் ,இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன செயலாளர் ரி.வரதராஜன், இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன உப தலைவர் ஈ.அர்னால்ட் என பலரும் இவ் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# இங்கிலாந்து கிரிக்கெட் அணிக்கெதிரான டெஸ்ட் தொடர்: நியூஸிலாந்து கிரிக்கெட் அணி அறிவிப்பு



இங்கிலாந்து கிரிக்கெட் அணிக்கெதிரான மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடும் நியூஸிலாந்துக் கிரிக்கெட் அணி விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தொடரின் முதல் டெஸ்ட் போட்டியில் மைக்கேல் பிரேஸ்வெல் 16ஆவது வீரராக இணைக்கப்பட்டுள்ளார்.

ஐ.பி.எல். இறுதிப்போட்டியில் விளையாடிவிட்டு திங்கட்கிழமை லண்டன் வந்தடைந்த ட்ரென்ட் போல்ட் முதல் டெஸ்டில் இடம் பெற வாய்ப்பில்லை.

ஆரம்ப 20 வீரர்கள் கொண்ட அணியில் இருந்து ஜேக்கப் டஃபி, பிளேயர் டிக்னர் மற்றும் ரச்சின் ரவீந்திரா ஆகியோர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கேன் வில்லியம்சன் தலைமையிலான அணியில், டொம் ப்ளூன்டெல், ட்ரென்ட் போல்ட், டெவோன் கான்வே, கொலின் டி கிராண்ட்ஹோம், கேம் பிளெட்சர், மெட் ஹென்றி, கெய்ல் ஜேமிசன், டொம் லதம், டேரில் மிட்செல், ஹென்றி நிக்கோல்ஸ், அஜாஸ் படேல், டிம் சவுத்தி, நெய்ல் வாக்னர், வில் யங், மைக்கேல் பிரேஸ்வெல் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இரு அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி, நாளை 2ஆம் திகதி லண்டனில் உள்ள லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL
மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022
இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022
தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..................
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ..................
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ..................
வாக்களித்தவர் பெயர் : ..................
முகவரி : ..................
மொபைல் இல. : ..................

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:
1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:
SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்குபெற முடியாது.
ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 04-06-2022
இல. 10

STREAM LIKE A BOSS!
இலங்கையின் முதன்மையான, அதிவேகமான மற்றும் விஸ்தரிக்கப்பட்ட PREMIUM FIBRE வலையமைப்பு.
SLTMOBITEL
FIBRE

# 19 வயதுக்குட்பட்டோருக்கான புதிய லீக் தொடர் இம்மாதம் ஆரம்பம்

**திருகோணமலை குறூப் நிருபர்**

19 வயதுக்குட்பட்ட வீரர்களை இலக்காகக் கொண்டு இளையோர் லீக் கிரிக்கெட் போட்டித் தொடர் ஒன்றை ஏற்பாடு செய்ய இலங்கை கிரிக்கெட் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஐசிசி இன் 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணம் மற்றும் அதனைத் தொடர்ந்து இளம் வீரர்களைக் கொண்ட ஒரு அணியைத் தயார்படுத்தும் நோக்கில் இந்தப் போட்டித் தொடரை நடத்த இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

இந்த போட்டித் தொடருக்கு இலங்கை கிரிக்கெட் நிர்வாகக் குழு ஒப்புதல் அளித்துள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதன்படி, இலங்கை கிரிக்கெட் சபையினால் முதல் தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இளையோர் லீக் கிரிக்கெட் போட்டித் தொடர் எதிர்வரும் ஜூன் மாதம் 19ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை கண்டி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானம் மற்றும் அஸ்கிரிய கிரிக்கெட் மைதானங்களில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டித் தொடரில் கொழும்பு தெற்கு, கொழும்பு வடக்கு, காலி, கண்டி மற்றும் தம்புள்ளை ஆகிய ஐந்து அணிகள் இடம்பெறவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் முக்கிய அம்சம் என்னவெனில் கடந்த காலங்களில் இலங்கை கிரிக்கெட் சபையினால் இவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய மட்ட லீக் தொடர்களில் இடம்பிடித்து வந்த யாழ்ப்பாணம் என்ற பெயரிலான அணி, இலங்கை கிரிக்கெட்டின் 19 வயதுக்குட்பட்டோருக்கான இளையோர் லீக் கிரிக்கெட் போட்டித் தொடரில் உள்ளடக்கப்படவில்லை.

ரஞ்சித் மதுரசிங்க தலைமையிலான கனிஷ்ட தேர்வுக் குழுவினால் ஒவ்வொரு அணிகளுக்கும் வீரர்கள் தெரிவு செய்யப்படவுள்ளதுடன், ஒவ்வொரு அணியிலும் 13 வீரர்கள் மற்றும் இரண்டு மேலதிக வீரர்கள் உள்ளடங்குவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. .

அத்துடன், 50 ஓவர்கள் கொண்ட இப்போட்டித்தொடரில்11போட்டிகள்நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், கடந்த செவ்வாய்கிழமை (24) இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில 19 வயதின் கீழ் லீக் கிரிக்கெட் போட்டித் தொடர் உள்ளிட்ட 7 புதிய திட்டங்களுக்கு இலங்கை கிரிக்கெட் நிர்வாகக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

இலங்கை கிரிக்கெட்டால் ஏற்பாடு செய்யப்படுகின்ற பிரதான கழகங்களுக்கிடையிலான மேஜர் கழகப் போட்டித் தொடரில் பங்குபற்றும் அனைத்து கழகங்களுக்கும் வழங்கப்படுகின்ற நிதியை இந்த ஆண்டு முதல் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நடப்பு ஆண்டு முதல் கழகமொன்றுக்கு 2.5 மில்லியன் ரூபா நிதி மேலதிகமாக வழங்கப்படும். இந்த அதிகரிப்புடன், ஒவ்வொரு கழகமும் ஆண்டொன்றுக்கு27.5மில்லியன்ரூபாய்நிதியைப் பெற்றுக்கொள்ளும்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையை கருத்தில் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, இந்த ஆண்டில் 715 மில்லியன் ரூபாய் நிதி முதல்தர கழகங்களுக்காக வழங்கப்படுகின்ற போட்டித் தொடர் நிதிக்காக முதலீடு செய்யப்பட்டுள்ளது.

சொந்த மைதானங்களைக் கொண்ட 09 மேஜர் கழகங்களுக்கு தலா 5 மில்லியன் ரூபாய் நிதி வழங்க முடிவு எடுக்கப்பட்டது. இந்த மானியமானது, அந்த கழகங்களின் மைதானங்களையும், உட்கட்டமைப்பையும் பராமரிக்கவும் மேம்படுத்தவும் உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

புதிய கழக அரங்கு மற்றும் பார்வையாளர் அரங்கை நிர்மாணிப்பதற்காக கோல்ட்ஸ் கிரிக்கெட் கழகத்திற்கு வழங்கப்பட்ட 40 மில்லியன் ரூபாய்க்கு மேலதிகமாக, 20 மில்லியன் ரூபாய் நிதி உதவி வழங்க முடிவு செய்யப்பட்டது.

மக்கொன, சர்ரே வில்லேஜ் கிரிக்கெட் மைதானத்தில் இலங்கை கிரிக்கெட் சபை சொந்தமான இரண்டு ‘பங்களாக்களை’ புனரமைப்பதுடன் சர்ரே கிரிக்கெட் மைதானத்திற்கு விளையாட வரும் கழக அணிகளுக்கு தங்குமிட வசதியை வழங்க இந்த பங்களாக்கள் பயன்படுத்தப்படும்.

நடப்பு ஆண்டில் பிரிவு 1 கழகங்கள் மற்றும் பிரதான கழகங்களுக்காக அழைப்பு மகளிர் ரி 20 போட்டித் தொடர் ஒன்றை நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான மெய்வல்லுநர் விளையாட்டு போட்டி

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான மெய்வல்லுநர் விளையாட்டுப்போட்டியானது வெபர் மைதானத்தில் இடம்பெற்றது.

சமூக சேவை திணைக்களமும் மட்டக்களப்பு மாவட்ட செயலக சமூக சேவைகள் பிரிவும் இணைந்து நடாத்திய விளையாட்டுப் போட்டித் தொடரானது மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் நடைபெற்றது.

இப்போட்டிக்கு சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் (மத்தி) பணியாற்றல்களுடன் 195 மாற்றுத்திறனாளிகள் இப்போட்டி நிகழ்வுகளில் கலந்துகொண்டிருந்தனர்.



போட்டி நிகழ்வுகளில் பங்கேற்று வெற்றியீட்டிய வெற்றியாளர்களுக்கு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதேவேளை இப்போட்டி தொடரில் முதலாம் இடங்களைப் பெற்றுக்கொண்ட போட்டியாளர்கள் தேசிய மட்ட தடகள விளையாட்டுப் போட்டிக்கு எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் அனுப்பிவைக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜூன் மாதம் 1ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.